பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஆனி 05 புதன்கிழமை (19-06-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:206

# உடன்படிக்கை அமுலாக்கத்தை கண்காணிக்கக் குழு அமைப்பு!

## அரசு - புலிகள் பேச்சில் நேற்று இணக்கம்

கொழும்பு,ஜூன்19

**புரிந்துணர்வு உடன்படிக்கை சரிவர நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதைக் கண்காணிப்பதற்காக அரசு - புலிகள் இணைந்து கூட்டுக் குழு ஒன்றை அமைக்கவுள்ளனர். இது தொடர்பாக அரசுக்கும் புலிகளுக்கும் இடையே இணக்கம் காணப்பட்டுள்ளது.**

**வன்னிக்கு நேற்று விஜயம் செய்த சமாதான நடவடிக்கைகளுக்கான செயலக அதிகாரிகள் குழுவுக்கும் விடுதலைப் புலிகளின் குழுவுக்கும் இடையில் நடந்த பேச்சுக்களில் இந்த இணக்கம் ஏற்பட்டது.**

கொழும்பிலிருந்து வவுனியாவுக்குச் சென்ற சமாதான நடவடிக்கைகளுக்கான செயலக அதிகாரிகள், அங்கிருந்து ஹெலி மூலம் கிளிநொச்சிக்குப் போய்ச் சேர்ந்தனர்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## நெடுந்தீவு சென்ற புலிகளுடன் கடற்படையினர் வாக்குவாதம்!

### குறிகாட்டுவானில் நேற்றுச் சம்பவம்

யாழ்ப்பாணம்,ஜூன்19

நெடுந்தீவில் அரசியல் பணிகளை மேற்கொள்ளச் சென்ற விடுதலைப் புலிகளின் குழுவுக்கும் கடற்படையினருக்கும் இடையில் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் குறிகாட்டுவான் சோதனைச்சாவடியில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றது.

புங்குடுதீவில் நேற்று நடந்த நிகழ்வுகளில் பங்குபற்றிய பின்னர் விடுதலைப் புலிகளின் அரசியல் குழு நெடுந்தீவுக்குச் செல்வதற்காக குறிகாட்டுவான் இறங்குதுறையை நோக்கிச் சென்றது.

இறங்குதுறைக்குச் சமீபமாக அமைந்துள்ள சோதனைச்சாவடியில் புலிகளின் குழு தடுத்து நிறுத்தப்பட்டது. அவர்களின் வாகனங்கள் செல்ல முடியாதவாறு பனங்குற்றி போட்டு பாதை மறிக்கப்பட்டது.

விடுதலைப் புலிப் போராளிகளை உடற்சோதனை செய்யவேண்டும் என்றும் -

உடற்சோதனைக்கு உட்படுத்தாமல் நெடுந்தீவுக்குச் செல்ல அனுமதிக்க வேண்டாம் என்று உயர்மட்டத்தில் இருந்து உத்தரவு வந்துள்ளது என்றும் -

கடற்படையினர் புலிகளின் குழுவிடம் தெரிவித்தனர்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படையின் செயல் குறித்து விசாரணை நடத்த உத்தரவு!

### பாதுகாப்பு அமைச்சின் செயலர் விடுத்தார்

கொழும்பு,ஜூன்19

தீவுப் பகுதியில் அரசியல் பணிகளுக்காகச் சென்ற விடுதலைப் புலிகளுக்கு முட்டுக்கட்டைகளை கடற்படையினர் ஏற்படுத்தியது குறித்து விசாரணை நடத்துமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணாண்டோ கடற்படை பதில் தளபதி ரியர் அட்மிரல் ரொகான் விஜயவிக்கிரமவிற்கு பணித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் தீவுப் பகுதிக்குச் சென்றபோது கடற்படை அதிகாரி ஒருவர் அவர்களின் நடவடிக்கைகளுக்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.மணிக்கூண்டுக் கோபுரத்தை பிரிட்டிஷ் தூதர் திறந்துவைப்பார்

யாழ்ப்பாணம்,ஜூன்19

புனரமைக்கப்பட்ட யாழ்.மணிக்கூண்டுக் கோபுரம் இன்று காலை 11 மணிக்குத் திறந்து வைக்கப்படவுள்ளது. இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் லிண்டா டபீல்ட் அம்மையார் கோபுரத்தைத் திறந்துவைப்பார்.

யாழ்.மாநகரசபையின் அச்சாணியாக நகரின் மத்தியில் எழுந்து நிற்கும் மணிக்கூண்டுக் கோபுரம் கடந்த கால யுத்த அனர்த்தங்களால் கடும் சேதத்துக்கு உள்ளாகி இருந்தது.

பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸ் இலங்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டணி செயற்குழு ஞாயிறன்று கூடுகிறது!

### சிவாவின் இடத்துக்கு யாரென்பது முடிவாகும்

கொழும்பு,ஜூன்19

தமிழர் விடுதலைக் கூட்டணியின் புதிய தலைவர் நியமனம், தேசிய பட்டியல் வெற்றிடத்துக்கு புதியவர் நியமனம் ஆகியன தொடர்பான முடிவுகளை மேற்கொள்வதற்காக கூட்டணியின் மத்திய செயற்குழு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30க்கு கூட்டணியின் தலைமையகத்தில் கூடுகின்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உறுப்பினரான எஸ்.முத்துலிங்கத்தை தேசியப்பட்டியல் எம்பியாக

(14 ஆம் பக்கம் பார்க்க)

### மீளக்குடியமர அனுமதி கோரி

## வலி.வடக்கு மக்கள் இன்று மறியற் போர்

வலி.வடக்கு,ஜூன்19

வலி.வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் தம்மை மீளக்குடியமர அனுமதிக்குமாறு கோரி இன்று மறியற் போராட்டத்தையும் பேரணியையும் நடத்தவுள்ளனர்.

தெல்லிப்பழை பிரதேச செயலகத்தின் பணிகளை முடக்கும் வகையில் காலை 7 மணிக்கு இந்த மறியல் போராட்டம் ஆரம்பமாகும். அங்கு போராட்டம் தொடர்ந்து இடம்பெற, ஒரு பகுதியினர் சைக்கிள்கள், லான்ட் மாஸ்ரர் ஆகியவற்றில் பேரணியாக யாழ்.செயலகம் நோக்கிச் செல்வர்.

அவர்கள் யாழ்.செயலகத்தில் மகஜர் ஒன்றைக் கையளித்த பின்னர் கண்காணிப்புக் குழு அலுவலகத்திலும் மகஜர் கையளிக்க ஏற்பாடகியுள்ளது.

வலி.வடக்கு விவசாயிகள் கழகம்

(14 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இடைக்கால நிர்வாகம் வருமா?

### பேச்சு நடத்தினாலும் இணக்கம் காண்பது கஷ்டம்

கொழும்பு,ஜூன்19

**வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு உத்தேசிக்கப்பட்டுள்ளபடி இடைக்கால நிர்வாகம் வருமா என்ற சந்தேகம் அரசியல் வட்டாரங்களில் எழுந்துள்ளது. தாய்லாந்தில் அரசுக்கும் புலிகளுக்கும் இடையே பேச்சு ஆரம்பமானதும் முதல் விடயமாக இடைக்கால நிர்வாகத்தை எடுத்துக்கொள்ள அரசு ஒப்புக்கொண்டுள்ளது. என்றாலும் பேச்சில் இணக்கம் காணப்படுமா என்பதே பெரிய கேள்விக்குறியாக இருக்கிறது.**

இடைக்கால நிர்வாகத்தை எப்படி அமைப்பது, எந்தவிதத்தில் அந்த நிர்வாகம் இயங்கவேண்டும் என்பன போன்ற விடயங்களில் இருதரப்பும் இணங்கினால்தானே இடைக்கால நிர்வாக அமைப்பு உருவாகும்.

வடக்கு - கிழக்கிற்கு இடைக்கால நிர்வாகம். அது புலிகளின் பொறுப்பில் இருக்கும் என்பது பொதுத்தேர்தலுக்கு முன்னரே ரணில் விக்கிரமசிங்க அளித்த வாக்குறுதி.

தேர்தலில் வெற்றிபெற்று அவர் அரசாங்கத்தை அமைத்த பின்னர் இடைக்கால நிர்வாகத்தைப் பின்தள்ளிவிட்டு

(14 ஆம் பக்கம் பார்க்க)

## தப்பியோடிய படையினரை பிடிக்க மீண்டும் வேட்டை!

கொழும்பு,ஜூன்19

படைகளில் இருந்து தப்பியோடியவர்களைப் பிடிப்பதற்கான வேட்டை ஒன்று மீண்டும் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. நாட்டில் நடைபெறும் கொலைகள், கொள்ளைகள் ஆகியவற்றில் இவர்கள் சம்பந்தப்பட்டிருப்பதை அடுத்தே வேட்டை நடத்தப்படவிருக்கிறது.

பதில் பொலீஸ்மா அதிபர் ஆனந்த ராஜாவின் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஒரு மாநாட்டில் இதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

படைகளில் இருந்து தப்பியோடியிருப்போரின் எண்ணிக்கை 30 ஆயிரத்துக்கும் அதிகமானது என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இவர்களில் பெரும்பாலானோர் இராணுவத்தைச் சேர்ந்தவர்கள்.

(ஐ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# விலை உயர்வுகள் அரசுக்குத் தலையிடி; கட்டுப்படுத்துவது தொடர்பாக ஆராய்வு

கொழும்பு,ஜூன்19

அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வுகள் அரசுக்குத் தலையிடியைக் கொடுத்து வருகிறது. இதனால் விலை உயர்வுகளை எவ்வாறு கட்டுப்படுத்தலாம் என்பது குறித்து ஆராயப்பட்டு வருகின்றது.

கடந்தவாரம் பல அமைச்சர்கள் இது சம்பந்தமாகக் கூடி ஆராய்ந்தனர். இதையடுத்து நேற்றுமுன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் முக்கிய கூட்டமொன்று நடைபெற்றது.

நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி, அரசியல் சட்ட அமைச்சர் ஜீஎல்பீரிஸ், கிராமிய பொருளாதார அமைச்சர் பந்துல குணவர்த்தன, பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட மற்றும் அமைச்சர்களின் உயர் அதிகாரிகள் ஆகியோர் இக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

எரிபொருள், மின்சாரம், காஸ் ஆகியவற்றினதும் அத்தியாவசிய உணவுப் பொருள்களினதும் விலைகள் சமீபத்தில் திடீரென உயர்ந்திருக்கின்றன.

விலைகள் உயர்வுகளுக்கு எதிராக எதிர்க்கட்சியினரும் பொதுமக்களும் ஏற்கனவே குரல் எழுப்பியிருக்கின்றனர். (ஐ)

## மாணவி மீது வல்லுறவு முயற்சி; இளைஞனுக்கு விளக்கமறியல்

பாடசாலை மாணவி ஒருவரை கடத்திச் சென்று பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த முயற்சித்ததாகக கூறப்படும் இளைஞர் ஒருவர் நேற்று யாழ்.நீதிமன்றில் பொலீஸாரால் ஆஜர் செய்யப்பட்டார்.

நேற்றுமுன்தினம் பாடசாலைக்குச் சென்ற மாணவியைக் கடத்திச் சென்ற இவர், பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த முயன்றதாகத் தெரிவித்த பொலீஸார் குறிப்பிட்ட நபரை விளக்க மறியலில் வைக்குமாறு மன்றில் கேட்டுக் கொண்டதை அடுத்து ஜூலை மாதம் முதலாம் திகதி வரையும் அவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிமன்ற மேலதிக நீதிவான் திருமதி ச.இளங்கோவன் உத்தரவிட்டார்.

நகரின் பெண்கள் பாடசாலையில கல்வி கற்கும் மாணவி ஒருத்தியையே பிரஸ்தாப இளைஞன் கடத்திச் சென்று வல்லுறவு புரிய முயற்சித்ததாகக் கூறப்படுகிறது.

பிரஸ்தாப மாணவியை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்திய போதும அது தொடர்பான அறிக்கை இன்னும் கிடைக்கவில்லை என்று பொலீஸாரால் மன்றில் தெரிவிக்கப்பட்டது. (ஐ-10)

# அமைச்சர்கள் ஜோன், ரவிக்கு எதிராகப் பிரேரணைகள்

கொழும்பு,ஜூன்19

உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கும் வர்த்தக, நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சர் ரவி கருணாநாயக்காவுக்கும் எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணைகளைக் கொண்டு வருவதென பொ.ஐ.முன்னணி தீர்மானித்திருக்கிறது.

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றக் கட்டடத்தில் நடைபெற்ற பொ.ஐ.மு. நாடாளுமன்றக் குழுக் கூட்டத்திலேயே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

பொய்க் குற்றச்சாட்டுக்களின் பேரில் எதிர்க்கட்சியினர் கைது செய்யப்படுவதற்கு எதிராக அமைச்சர் ஜோன் அமரதுங்க மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படும். விலைவாசிகள் உயர்வு, கூ.மொ.வி. நிலையத்தில் முறையற்ற நியமனங்கள் ஆகியவற்றுக்கு எதிராக அமைச்சர் ரவி கருணாநாயக்க மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படும்.

இவ்விரு பிரேரணைகளையும் அடுத்த வாரத்தில் சபாநாயகரிடம் கையளிப்பதெனவும் பொ.ஐ.மு.நாடாளுமன்றக் குழு தீர்மானித்திருக்கிறது. (ஐ)

## இந்தியாவில் தங்கியுள்ள

# அகதிகளை அழைக்க அமைச்சு நடவடிக்கை

கொழும்பு,ஜூன்19

தமிழ்நாட்டில் தங்கியிருக்கும் ஈழத்தமிழ் அகதிகள் இலங்கை திரும்புவது குறித்து புனர்வாழ்வு, அகதிகள் மீள் குடியமர்வு அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாக அமைச்சு அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்று தகவல் வெளியிட்டது.

இது தொடர்பாக ஆராய்வதற்கென அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா இம்மாத இறுதியில் இந்தியாவுக்குச் செல்லவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தமிழ் நாட்டில் உள்ள 111அகதி முகாம்களில் சுமார் 66ஆயிரம் தமிழ் அகதிகள் தங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது. இவர்கள் பயண ஆவணங்கள் எதுவும் இல்லாதவர்கள். தற்போதைய சமாதான முயற்சிகளையடுத்து இந்த அகதிகளில் பலர் நாடு திரும்புவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர்.

எனவே அவர்களைப் பாதுகாப்பான முறையில் இங்கு அழைத்து வருவது குறித்து ஆராய்வதற்காகவே அமைச்சர் ஜயலத் இந்தியாவுக்குச் செல்லவுள்ளார் எனவும் கூறப்பட்டது. (ஒ-4-12)

# மருதங்கேணி பாடசாலைகளில் மாணவர் தொகை அதிகரிப்பு

## ஆனால் அடிப்படை வசதிகள் கிடையாது

வடமராட்சி கிழக்கு,ஜூன்19

மருதங்கேணிப் பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமரத் தொடங்கியுள்ள பகுதிகளில் இயங்கத் தொடங்கியுள்ள 4 பாடசாலைகளிலும் மாணவர்கள் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

அப்பகுதியிலிருந்து யுத்தத்தினால வன்னி மற்றும் யாழ் குடாநாட்டின் ஏனைய பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து சென்ற குடும்பங்கள் மீளவும் சொந்த இடங்களுக்குத் திரும்பி வருவதனால் பாடசாலைகளில் மாணவர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

எனினும், மீளவும் இயங்கத் தொடங்கியுள்ள செம்பியன்பற்று அ.த.க. பாடசாலை, மருதங்கேணி இந்து தமிழ் கலவன் பாடசாலை, உடுத்துறை மகா வித்தியாலயம், ஆழியவளை சி.சி.த.க.பாடசாலை ஆகியவற்றில் அடிப்படை வசதிகள் பற்றாக் குறையாகவே உள்ளதாகக் கூறப்படுகிறது. (ஒ-182)

# இந்தியா வழங்கும் கடனில் எம்.பிக்களுக்கு சொகுசு கார்!

கொழும்பு,ஜூன்19

இந்தியா இலங்கைக்கு வழங்கும் 520 கோடி ருபாவுக்கு மேற்பட்ட கடனில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கார்களும் வழங்கப்படும்.

225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் இக்கார்களை வாங்கமுடியும். இந்தியாவில் தயாரிக்கப்படும் மாருதி கார்கள் முதல் இந்துஸ்தான், ஹூண்டாய், டீவோ வரையிலான கார்களை அவர்கள் வாங்கலாம். கடந்த பொதுத் தேர்தலில் வெற்றிபெற்ற பல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகனங்கள் எதுவும் இல்லை. (ஐ)

## ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

தென்மராட்சி,ஜூன்19

தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேசத்தில் இயங்கும் அனைத்து நிறுவனங்களின் தலைவர்களையும் இதில் கலந்துகொள்ளுமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் அறிவித்துள்ளார்.

விவசாயம், கால்நடை அபிவிருத்தி தென்னை அபிவிருத்தி, மீளக் குடியமர்தல், சுகாதாரம், கல்வி, உள்ளூராட்சி, சூழல் பாதுகாப்பு, வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மின்சாரம், வீடமைப்பு, கிராமிய அபிவிருத்தி, சிறுகைத் தொழில், கூட்டுறவு, கடற்றொழில், போக்குவரத்து, கலால், பனை அபிவிருத்தி, சிறுவர் பாதுகாப்பு சமூக சேவை உட்பட ஏனைய நிறுவனங்கள் இக்கூட்டத்திற்கு அழைக்கப்பட்டுள்ளன. (ம-117)

## கலந்துரையாடல்

தென்மராட்சி,ஜூன்19

தென்மராட்சி பிரதேச அபிவிருத்தி தொண்டர்கள் பிரிவு IIக்கும் பயிற்சிகள் வழங்கிய அபிவிருத்திப் போதனாசிரியர்களுக்குமான கலந்துரையாடல் நாளை வியரழக்கிழமை 10.00 மணிக்கு பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

தொண்டர்களுக்கான இறுதி மதிப்பீட்டுப் பரீட்சை தொடர்பாக கலந்துரை யாடவுள்ளதால் போதனாசிரியர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் அறிவித்துள்ளார். (ம-117)

## விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு,ஜூன்19

இலங்கை வங்கி, வர்த்தக வங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட தாச்சி சங்கத்தினரால் நடத்தப்பட்டுவரும் தாச்சிப் சுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் சுன்னாகம் ஈஸ்வரி வி.கவும் நவாலி தென்றல் வி.கவும் பங்குபற்றுகின்றன. (ம-86)

☆ ☆ ☆

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நவாலி செனபீற்றர்ஸ் விளையாட்டுக் கழகம் தனது 50 ஆண்டு நிறைவையொட்டி கழக மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டத்தில் அராலி எ.எல்.வி.கவும் சுன்னாகம் ஸ்கந்தாவி.கவும் மோதுகின்றன. (ம-86)

☆ ☆ ☆

காரைநகர் அம்பாள் முன்பள்ளியும் தங்கோடை முன்பள்ளியும் இணைந்து நடத்தும் வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெற உள்ளது.

அம்பாள் முன்பள்ளி இயக்குநர் நா.குகநேசன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம், தியாகராசா ம.ம.வித்தியாலய அதிபர் பண்டிதர் மு.சு.வேலாயுபிள்ளை ஆகியோர் கலந்துகொள்வர். (ம-73)

ஜப்பான் தென்கொரியா

## உலகக் கிண்ண காலப்பந்து

2002 FIFA WORLD CUP KOREA JAPAN

31.05.2002 - 30.06.2002





இத்தாலிய வீரர் கிறிஸ்ரியனோ ஸனிற்ரி (வலது) பந்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதை அவதானிக்கும் தென்கொரிய வீரர் அன் ஜூங் - ஹவான் (இடது).

# தென் கொரியா தகுதி ஜப்பான் வெளியேற்றம்!

சியோல்,ஜூன்19

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி இரண்டாம் சுற்றின் இறுதி இரண்டு ஆட்டங்களும் நேற்று இடம்பெற்றன. ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட இந்த ஆட்டங்களில் இரு ஆசிய அணிகள் பங்கேற்றன. போட்டியை நடத்தும் ஜப்பான் மற்றும் தென்கொரிய அணிகளே அவை.

ஜப்பான் துருக்கியிடம் தோற்றது. அதன் உலகக் கிண்ண கனவு கலைந்தது. இறுதி நேரத்தில் தென்கொரிய வீரர் அன் ஜூங் - ஹவான் அடித்த பொன் கோல் மூலம் தென்கொரியா வரலாற்று வெற்றி பெற்றது. அதன் உதைபந்தாட்ட வரலாற்றில் முதற்றடவையாக கால்இறுதிக்குத் தகுதிபெற்றது.

நேற்று நடந்த இரு ஆட்டங்களுடன் போட்டியின் 2ஆம் சுற்று முடிவடைந்தது. நாளைமறுதினம் முதல் கால் இறுதி ஆட்டங்கள் நடைபெறவுள்ளன.

முதலாவது ஆட்டம் ஜப்பான் மற்றும் துருக்கி அணிகளுக்கிடையில் இடம்பெற்றது. 1-0என்ற கோல் அடிப்படையில் துருக்கி வென்று, ஜப்பானின் உலகக் கிண்ணக் கனவைக் கலைத்தது. இரு அணிகளும் சளைக்காமல் எந்தத் தரப்புக்கும் விட்டுக்கொடுக்காமல் ஆடின. ஆட்டத்தின் 12ஆவது நிமிடத்தில் துருக்கி அணிக்கு கிடைத்த 'கோணர் கிக்'கை அழகாக கோலாக்கினார் அந்த அணிவீரர் உமிற் டவாலா. கோணரில் இருந்து உயர்ந்து வந்த பந்தை குறுக்கே பாய்ந்து தலையால் மோதி கோலாக்கினார் அவர். பிரேஸிலில் பிறந்தவரான ஜப்பானிய வீரர் அலெக்ஸ் துருக்கிய பின்கள வீரர்களுக்கு மிகவும் அச்சுறுத்தலாக இருந்தார். அவரை சமாளிப்பதற்கு அவர்கள் பாடாதபாடுபட்டனர். முன்பாதி ஆட்டம் நிறைவடைவதற்கு 3நிமிடங்களே இருக்கையில் அவர் அடித்த ஒரு கட்டுப்பாடற்ற உதை (Free kick) சற்றுத் திரும்பி கோல் கம்பங்களிலிருந்து விலகிச் சென்றது. இதனால ஆட்டத்தைச் சமப்படுத்த ஜப்பானுக்குக் கிடைத்த அருமையான ஒரு சந்தர்ப்பம் தவறிப்போனது.

பின்னர், என்ன முயன்றும் ஜப்பானிய வீரர்களால் கோல் அடிக்கமுடியவில்லை. பின்பாதி ஆட்டத்தில் துருக்கி அணிவீரர்கள் கோல் அடிக்கும் முயற்சிகளைவிட ஜப்பானியர்கள் கோல் அடிப்பதைத் தடுப்பதிலேயே அதிக கவனம் செலுத்தினர்.

இரண்டாவது ஆட்டத்தில் பலம் மிக்க அணி எனக்கருதப்படும் இத்தாலியை எதிர்த்து தென்கொரியா மோதியது. ஆட்டநேரத்தில் இரு அணிகளும் தலா ஒரு கோல் அடித்து சமநிலையில் இருந்தன. இதனால் மேலதிக நேரம் வழங்கப்பட்டது. அந்த நேரத்தில் தென்கொரிய வீரர் அன் ஜூங் - ஹவான் அடித்த பொன்னான கோல் அணிக்கு வெற்றியைத் தேடித்தந்தது. உலகக் கிண்ண வரலாற்றில் மிகப் பெரிய அதிர்ச்சி வெற்றி இது என்று வர்ணிக்கப்படுகின்றது.

ஆட்டம் ஆரம்பித்த 4ஆவது நிமிடத்திலேயே தென்கொரியாவுக்கு ஒரு பெனால்டி உதை வாய்ப்புக் கிடைத்தது. ஆனால் அந்த வாய்ப்பை அன் ஜூங் -ஹவான் தவறவிட்டார். அவர் அடித்த பந்தை இத்தாலி கோல் காப்பாளர் பவூன் சமயோசிதமாகத் தடுத்தார். ஆட்டத்தின் 18ஆவது நிமிடத்தில் இத்தாலி முன்கள வீரர் கிறிஸ டியன் வைரி ஒரு கோலை அடித்து தன் அணியை முன்னிலைப்படுத்தினார். ஆட்டம் முடிவுறும் தறுவாய்வரை இந்த நிலையே தொடர்ந்தது. இத்தாலி வெற்றிபெறும் என்றே எண்ணப்பட்டது. ஆனால் தென்கொரிய வீரர் சியோல் கீ - கியோன் ஆட்டம் நிறைவடைவதற்கு இரண்டு நிமிடங்களே இருக்கையில் ஆட்டத்தின் தலைவிதியையே மாற்றினார். 88ஆவது நிமிடத்தில் தனது சகா ஹவங் சுன் - ஹொங் குறுக்கே தள்ளிய பந்தை வேகமாக உதைத்து கோலாக்கினார் அவர். இதனால் ஆட்டம் மேலதிக நேரத்துக்குச் சென்றது.

மேலதிக நேர ஆட்டத்தில், 103 ஆவது நிமிடத்தில் இத்தாலி வீரர் டொடி முறைகேடாக விளையாடியமைக்காக நடுவரால் சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டார். 126 ஆவது நிமிடத்தில் தென்கொரிய வீரர் அன் ஜூங் - ஹவான் அணியின் பொன்னான கோலை அடித்து வெற்றியைத் தேடித் தந்தார். இத்தாலிய பின்கள வீரரில் பட்டுத் திரும்பிய பந்தை சடுதியாக உதைத்து கோலைப் பெற்றார் அவர். இதன் மூலம் கால் இறுதியில் ஆடும் தகுதியைத் தென்கொரியா பெற்றது.

தென்கொரியாவின் இந்த வெற்றியை அந்த நாட்டு ரசிகர்கள் வீதிகளில் இறங்கி ஆடிப்பாடிக் கொண்டாடினர். (ம)



ஜப்பானை வென்ற மகிழ்ச்சியில் துருக்கி வீரர்கள் மைதானத்தை சுற்றி வலம்வரும் காட்சி.

# பையிலிருந்த செல்போன் வெடித்ததில் பெண் காயம்

## தைபே ஹோட்டலில் சம்பவம்

தைபே,ஜூன்19

தைவானில் ஒரு பெண்ணின் கைப் பையில் இருந்த செல்போன் திடீரென வெடித்ததில் அவர் காயமடைந்தார். 'சென்' என்ற பெண்மணியே இவ்வாறு காயமடைந்தவராவார்.

இது பற்றி அப்பெண் கூறுகையில, 'நான் ஹோட்டல் ஒன்றில் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். வெடிப்பதற்கு முன் செல்போன் சூடாகியிருக்கவேண்டும். கைப் பையில் இருந்து வெப்பம் வந்ததை என்னால் உணர முடிந்தது.

இருப்பினும் நான் சாப்பிட்டுக் கொண்டு இருந்ததால் கொஞ்சம் அலட்சியமாக இருந்துவிட்டேன். சில நிமிடங்களில் அது வெடித்தது. வெடித்துச் சிதறிய பொருள்கள, என் கை, கால்களில் பட்டது. அந்த இடங்கள் வெந்துபோய்விட்டன' என்றார்.

'ஒரு வருடத்துக்கு முன்னர்தான் அந்த செல்போனை வாங்கினேன். வழக்கத்துக்கு மாறாக எதுவும் நடப்பதில்லை. வெடிப்பதற்கு 10 நிமிடங்கள் முன்னதாகவும் நான் அந்த செல்போனில் பேசியிருந்தேன்' என்றும் அவர் கூறுகிறார்.

இது தொடர்பாக பொலீஸில் புகார் கொடுத்த சென், செல்போன் கம்பனியிடம் இருந்து நஷ்டஈடு கோரியுள்ளார். (ம-9)

# பிரான்ஸ் நாடாளுமன்ற தேர்தல்; அதிபர் ஷிராக்கின் கட்சி வெற்றி

பாரிஸ்,ஜூன்19

பிரெஞ்சு நாடாளுமன்றத் தேர்தலில் அதிபர் ஜாக்கு யஸ் ஷிராக்கின் கட்சியான 'யுனியன் பார் த பிரசிடென்ஷியல்' (யு.எம்.பி) பெரும்பான்மை இடங்களில் வெற்றிபெற்றுள்ளது.

மொத்தம் 577 தொகுதிகளில் 399 தொகுதிகளை யு.எம்.பி. கட்சியும் அதன் தோழமைக் கட்சிகளும் கைப்பற்றிக் கொண்டன.

பிரான்ஸின் இடதுசாரி அணி 178 தொகுதிகளில் வெற்றிபெற்றது. ஜனாதிபதித் தேர்தலால் 'ஷிராக்'இற்கு சவாலாக இருந்த வலதுசாரி அணித் தலைவர் ஜன் மேரி லிபெனின் கட்சிக்கு ஓர் இடம் கூட கிடைக்கவில்லை.

இந்தத் தேர்தல்மூலம் 'ஷிராக்கின் கூட்டணிக்கு அறுதிப் பெரும்பான்மை கிடைத்துள்ளது. (ஒ-9)

# ஜெருசலேமில் தற்கொலைத் தாக்கு; சிறுவர் உட்பட 17 பேர் உயிரிழப்பு!

லண்டன்,ஜூன்19

ஜெருசலேமில் பஸ் ஒன்றின் மீது இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் 17 பேர் கொல்லப்பட்டனர்.

பாட் பகுதியில் உள்ளூர் நேரப்படி நேற்றுக்காலை 8 மணிக்கு இந்தத் தாக்குதல் இடம்பெற்றது. பணி நேரப் பரபரப்பின்போது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பாடசாலை செல்லும் மாணவர்கள் மற்றும் அலுவலகங்களுக்குச் செல்லும் ஊழியர்கள் ஆகியோரால் நிறைந்திருந்த பஸ் ஒன்று வீதிச் சந்திப்பில் தரித்து நின்றபோது வெடித்துச் சிதறியது. இதில் தற்கொலைத் தாக்குதலாளியும் உயிரிழந்தாகக் கூறப்படுகிறது.

வீதிச் சந்திப்பில் துண்டு துண்டாகச் சிதறிய உடல்கள் பரவிக் கிடந்ததாக நேரில் கண்ட சாட்சிகள் தெரிவித்தன.

நேற்றிரவு வரை இந்தத் தாக்குதலுக்கு எவரும் பொறுப்பேற்கவில்லை.

சம்பவம் நடந்து இரண்டு மணித்தியாலங்கள் கழித்து சம்பவ இடத்தைப் பார்வையிட்ட இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் தாக்குதலை பலஸ்தீனர்களின் பயங்கரவாதம் என வர்ணித்தார்.

இதேசமயம், பலஸ்தீனத் தகவல் தொடர்பு அமைச்சர் அஹெட் ரப்போ தாக்குதலைக் கண்டித்துள்ளார்.

பலஸ்தீன நிர்வாகத்துக்கு எதிராக இஸ்ரேல பிரசாரங்களை மேற்கொள்ள மட்டுமே இத்தாக்குதல் பயன்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பலஸ்தீனத் தற்கொலைத் தாக்குதலாளிகள் இஸ்ரேலுக்குள் ஊடுருவுவதைத் தடுக்கும் நடவடிக்கையாக மேற்குக் கரையில் உள்ள பலஸ்தீன நகரங்களை சுற்றி இஸ்ரேல் வேலி அமைக்கும் பணியை தொடங்கியுள்ள சமயத்தில் இந்தத் தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-9)



தற்கொலைத் தாக்குதலில் உருக்குலைந்துபோய்க் கிடக்கும் பஸ்

# சுறா மீனின் வயிற்றில் மனிதனின் அவயவங்கள்!

மீனவர்களிடம் அகப்பட்ட சுறா மீன் ஒன்றின் வயிற்றில் மனிதனின் கால் மற்றும் கைப் பகுதிகள் காணப்பட்ட சம்பவம் அண்மையில் இந்தோனேஷியாவில் இடம்பெற்றுள்ளது.

இந்தோனேஷிய கடலில் மீன் பிடிக்கச் சென்ற தாய்லாந்து மீனவர்கள் ஒரு சுறா மீனைப் பிடித்தனர். 3.7 மீற்றர் நீளமான இந்தச் சுறாமீனின் வயிற்றில் இருந்து வாய் வழியாக ஒரு மனிதனின் கால் நீட்டிக்கொண்டிருந்தது. 300 கிலோ எடை இருந்த அந்த மீனை அறுத்துப் பார்த்த போது அதன் வயிற்றில் ஓர் ஆணின் வலது கையும் காணப்பட்டது.

இந்தச் சுறா, அந்த மனிதனை ஒரு வாரத்துக்கு முன்பு விழுங்கியிருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. இது தொடர்பாக மீன்பிடிப் படகின் தலைவர் இந்தோனேஷிய பொலீஸில் முறையிட்டுள்ளார். (ஒ-9)

# ஆப்கான் அமைச்சரவையை நியமிப்பதில் இழுபறி நிலை

## ஹர்சேயின் முயற்சிகள் தோல்வி

காபூல்,ஜூன்19

ஆப்கானிஸ்தான் நாடாளுமன்றத்தை அமைப்பது மற்றும் நாட்டில் பொதுத் தேர்தலை நடத்துவது, அமைச்சரவையை நியமிப்பது என்பன தொடர்பாக 'லோயா ஜிர்கா'வில் ஏற்பட்டுள்ள ஸ்தம்பித நிலையைப் போக்குவதற்கு புதிய அதிபர் ஹமீட் ஹர்சே எடுத்த முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்துள்ளன.

மிகவும் ஆவலாக எதிர்பார்க்கப்பட்ட உரையொன்றின்போது அவர் இந்த விடயங்களைத் தெரிவித்தார்.

சட்டசபையை அமைப்பதற்குத் தேவையான நாள்கள், அமைச்சரவையின் வரிசை என்பன சிக்கல்களாக மாறியுள்ளதென அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறெனினும் அவர் விரைவில் முக்கிய அமைச்சுப் பதவிகளை அறிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. (ம-9)

# உடுத்துறை - யாழ்ப்பாணம் மினிபஸ் சேவை ஆரம்பம்

தென்மராட்சி,ஜூன்19

வடமராட்சி கிழக்கு உடுத்துறையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான தனியார் மினிபஸ் சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

2000ஆம் ஆண்டு மார்ச் மாதம் பளைப் பகுதியில் யுத்தம் அரம்பிக்கப்பட்டதையடுத்து இந்த மினிபஸ் சேவைகள் அனைத்தும் நிறுத்தப்பட்டிருந்தன. தற்போது ஏ-9 வீதி திறக்கப்பட்டதையடுத்து இப்பகுதியில் மக்கள் மீளக்குடியமர்ந்து வருவதையடுத்து மீண்டும் மினிபஸ் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த இரண்டு மாதமாக மாசார, சோரன்பற்று, செம்பியன்பற்று, தாளையடி, உடுத்துறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் புதுக்காட்டுச் சந்தியிலிருந்து சைக்கிள்களிலும், நடந்தும் தமது பயணத்தை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

தற்போது இரண்டு மினிவான்களே சேவையில் ஈடுபட்டுள்ளதாகவும் விரைவில் மேலும் பல வான்கள் சேவையில் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

காலையில் உடுத்துறையிலிருந்து புறப்படும் மினிபஸ்கள் மாலையில் திரும்பிச் செல்லுமெனவும் பயணிகள் தொகைக்கேற்ப காலையில் யாழ்ப்பாணத்திலிருந்து உடுத்துறைவரை சேவையில் ஈடுபடுத்தப்படலாமெனவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

# விவசாய டிப்ளோமாவுக்கு விண்ணப்பம் கோரப்படுகிறது

விவசாயத்தில் இரண்டு வருட டிப்ளோமா பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை விவசாயக் கல்லூரிகளான குண்டசாலை, பெல்வெதர, அங்குண கொல பெஸ்ஸ, வவுனியா ஆகிய நான்கு இடங்களுக்குமே மாணவர்கள் போட்டிப் பரீட்சை ஒன்றின் மூலம் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளில் இடம்பெறவுள்ள இப்பயிற்சி நெறிக்கு இந்த மாதம் 31ஆம் திகதி அன்று 17 வயதுக்குக் குறையாமலும் 25 வயதுக்கு மேற்படாமலும் ஜி.சீ.ஈ. சாதாரண பரீட்சையில் தமிழ் அல்லது சிங்களம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய 3 பாடங்களிலும், சமூகக் கல்வி அல்லது விவசாயம் ஆகியவற்றில் ஏதாவது ஒரு பாடத்திலுமாக நான்கு திறமைச் சித்திகளை இரு அமர்வுகளுக்கு மேற்படாது பெற்றிருக்கவேண்டும்.

அத்துடன் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் தாவரவியல், விலங்கியல், இரசாயனவியல், பௌதீகவியல், விவசாயம் ஆகிய ஐந்து பாடங்களில் ஏதாவது இரண்டில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

இம்மாதம் 31ஆம் திகதி விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதியாகும். கடந்த மாதம் 31ஆம் திகதிய வர்த்தமானியில் இது பற்றிய விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

பரீட்சை இவ்வருடம் செப்ரெம்பர் மாதம் 7ஆம் திகதி இடம்பெறவுள்ளது. (ஒ-86)

## பருத்தித்துறை மருதங்கேணி வீதி திறக்கக் கோரிக்கை

பருத்தித்துறை - மருதங்கேணி வீதி போக்குவரத்திற்கு திறக்கப்படாமையினால் அரச ஊழியர்களும், பொது மக்களும், பல மைல்கள் மேலதிகமாகப் பயணம் செய்தே வடமராட்சியிலிருந்து மருதங்கேணிக்குச் செல்ல வேண்டிய அவல நிலை காணப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பாக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிகாரிகள் ஆகியோருக்கு அப்பகுதியிலுள்ள பொது அமைப்புக்கள் மகஜர்கள் சமர்ப்பித்துள்ளபோதிலும் எவ்வித பயனும் கிடைக்காமையையிட்டு விசனம் தெரிவிக்கப்படுகின்றது. (182)

## செய்தியாளருக்கு நஷ்டஈடு

கடந்த பொதுத் தேர்தலின் போது அக்கரைப்பற்றுப் பள்ளிவாசலுக்கருகில் செய்திசேகரிக்கச் சென்ற சமயம் கைது செய்யப்பட்ட செய்தியாளருக்கு 40ஆயிரம் ரூபா நஷ்டஈடு வழங்குமாறு தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் நடந்த ஆர்ப்பாட்டம் பற்றிய செய்தியைச் சேகரிக்கச் சென்ற சமயம் கைது செய்யப்பட்டமை மூலம் இவரது அடிப்படை மனித உரிமை மீறப்பட்டுள்ளதாக உயர்நீதிமன்றம் தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது.

- இவ்வாறு அவர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டமை ஆர்ப்பாட்டம் சம்பந்தமான செய்திகளை அவர் வெளியிடக்கூடாது என்பதற்காகவே என்றும் உயர் நீதிமன்றம் சுட்டிக் காட்டியது.

அவரது அடிப்படை மனிதஉரிமை மீறப்பட்டமைக்காகவும், செய்திசேகரிக்காது தடுக்கப்பட்டமைக்காகவும், அவருக்கு 40ஆயிரம் ரூபா நஷ்டஈடாக வழங்கப்படவேண்டும என்று உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. (ஒ-12-4)

## பரந்தன் இரசாயன தொழிற்சாலை ஊழியர்களுக்கு!

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை ஊழியர்களின் ஏப்ரல் மற்றும் மே மாதத்திற்கான சம்பளம் கோண்டாவில் கிழக்கு நாகபூசணி அம்மன் கோவிலடியில் நேற்று செவ்வாய்க் கிழமை முதல் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை வழங்கப்படுவதாக தொழிற்சாலையின் தொழில் முகாமையாளர் அறிவித்துள்ளார். (ஒ)

## புலோலி அம்பன் விவசாய சம்மேளன கலந்துரையாடல்

புலோலி,ஜூன்19

புலோலி அம்பன் கமநல சேவைகள் நிலையத்திற்குட்பட்ட விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகளுடனான முக்கிய கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை 10.30 மணிக்கு கரவெட்டியில் அமைந்துள்ள கமக்கார கூடத்தில் நடைபெறவுள்ளது. இதில் அனைத்து விவசாய சம்மேளனங்களின் நிர்வாக சபை உறுப்பினர்கள் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ)

# நுண்நீர்ப்பாசனம் பற்றிய செயல்முறை விளக்கம்

## நாளை திருநெல்வேலியில்

யாழ்ப்பாணம்,ஜூன்19

யாழ்.விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் நுண்நீர்ப்பாசன செயல்முறை மாதிரி விளக்கம் திருநெல்வேலி மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நாளை 20ஆம் திகதி காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த மாதிரி அமைப்பில் தூவல் நீர்பாசன முறை பற்றியும், சொட்டு நீர்ப்பாசன முறை பற்றியும் மாதிரிகள் அமைக்கப்பட்டு விவசாயிகளுக்கும், விவசாய ஆர்வலர்களுக்கும் விளக்கமளிக்கப்படவுள்ளது.

'பிறவுண் கொம்பனி' அனுசரணையில் நடைபெறும் இந்த விளக்க நிகழ்வை நேரடியாக விவசாயிகள் பார்வையிட்டு பயன்பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ-180)

# சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பின்றி கொத்மலை திட்டம் நிறைவேறும்

## கரு ஜயசூரிய உறுதி

கொழும்பு,ஜூன்19

மேல்கொத்மலை நீர்மின் திட்டம் குறித்து ஏற்பட்டிருக்கும் தப்பபிப்பிராயத்தை நீக்கி, அத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவோம். இத்திட்டத்தினால் சுற்றாடலுக்கு எந்த ஒரு பாதிப்பும் ஏற்படாது என்பதற்கு பொது மக்களுக்கு உத்தரவாதமளிப்போம்.

எரிசக்தி, மின்சக்தி அமைச்சர் கரு ஜயசூரிய இவ்வாறு கூறுகிறார்.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் நிறுவப்பட்ட மின்சார உப நிலையத்தைத் திறந்துவைத்துப் பேசியபோதே அவர் இதனைக் கூறினார்.

"அடுத்த ஆண்டில் மின் க்ட்டணத்தைக் குறைக்க சில நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தேசித்திருக்கிறேன். நீர்மின் உற்பத்தியால் மக்களுக்கு கூடுதலான நிவாரணம் வழங்கமுடியும். அதனாலேயே நீர்மின உற்பத்தி குறித்து அமைச்சு கூடுதலான கவனம் செலுத்துகிறது.

சிறு நீர்வீழ்ச்சிகள் அருகே மின்சார உற்பத்தி நிலையங்களை அமைக்க முதலீட்டாளர்கள் முன்வந்திருக்கின்றனர்.

- இவ்வாறு அமைச்சர் கூறினார். (ஒ)

# அடையாள அட்டைகளில் ஒரு தொகுதி வந்தது

கொழும்பு,மே19

கொழும்பில் இருந்து ஒருதொகுதி தேசிய அடையாள அட்டைகள், யாழ். செயலக அடையாள அட்டைகள் அலுவலகத்துக்கு எடுத்துவரப்பட்டுள்ளன.

தொலைந்த தமது அடையாள அட்டைகளுக்குப் பதிலாகப் புதிய அட்டைகளுக்கு விண்ணப்பித்த மற்றும் பெயர் மாற்றங்கள், திருத்தங்கள் ஆகியவற்றை மேற்கொண்ட சுமார் 500 விண்ணப்பதாரிகளின் அடையாள அட்டைகளே இவ்வாறு எடுத்துவரப்பட்டுள்ளன. இவை யாவும் தரம் பிரிக்கப்பட்டு அந்தந்தப் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதாக சம்பந்தப் பட்ட அலுவலர் தெரிவித்தார். (ஒ-10)

ASOTL ASOTL ASOTL ASOTL ASOTL ASOTL ASOTL ASOTL ASOTL ASOTL

# Aitken Spence Overseas Travel Services (Pvt) Limited

**GSA for Eurail, Britrail, London Transport & Tradewinds**

IATA

விமான பயணச்சீட்டுகள், விடுதிவசதிகள், உல்லாசப் பயண வசதிகள் உட்பட சகல விதமான பயணச் சேவைகள்.

# Ace Cargo (Pvt) Ltd.

TNT

சர்வதேச கூரியர் சேவை, சர்வதேச தபால் சேவை, உள்நாட்டு கூரியர் சேவை, பொருள்களை விமானம், கப்பல் மூலம் அனுப்புதல், நிவீர்த்தி செய்யப்பட்டு அனுப்புதல்.

**யாழ்ப்பாணத்தில் ஜூன் 19 முதல்.**

139, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி : 021 3771

(4947)

ASOTL ASOTL ASOTL ASOTL ASOTL ASOTL ASOTL ASOTL ASOTL ASOTL

உதயன்

# பொய்ப் பிரசாரம்

தமிழீழ விடுதலைப் புலிகள் போரை நிறுத்திவிட்டு ஜனநாயக அரசியலுக்கு வந்திருக்கிறார்கள்.

அவர்கள் ஒரு விஷயத்தை அழுத்தம்திருத்தமாகவும், திட்டவட்டமாகவும் கூறிவருகிறார்கள்.

"நாம் பலமிழந்துபோய்ப் போரை நிறுத்திவிட்டு ஜனநாயக அரசியலுக்கு வரவில்லை. இன்றும் மிகுந்த இராணுவ பலத்துடனேயே இருக்கிறோம். எமது பலத்தை நாம் போர் நிறுத்தத்திற்கு முன்னர் நடத்திய தாக்குதல்களில் நிரூபித்திருக்கிறோம்.

என்றாலும், காலத்தின் தேவை காரணமாகவும், சர்வதேச சமூகத்தின் விருப்பத்துக்கு இணங்கவும் சமாதான வழியில் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண விரும்புகிறோம். அதனால்தான் அரசுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையைச் செய்துகொண்டுள்ளோம்.

நாம் புரிந்துணர்வு உடன்படிக்கையை சரிவரக் கடைப்பிடித்து வருகிறோம். சமாதான முயற்சிகளில் இருந்து நாம் விலகப்போவதில்லை. எக்காரணம் கொண்டும் சமாதான முயற்சிகளைக் குழப்பப் போவதும் இல்லை.

அரசுதான் புரிந்துணர்வு உடன்படிக்கையை முறையாக அமுல்செய்யவில்லை. அதனால்தான் சமாதானப் பேச்சுகள் இன்னும் தொடங்காமல் இருக்கின்றன.

சமாதானப் பேச்சுகள் சரிவரமாட்டா; மீண்டும் போர்தான் என்று அரசு முடிவுசெய்யுமானால் அதற்கும் நாம் தயார்; தயங்கமாட்டோம்.

ஆயினும் ஒன்றை மீண்டும் வற்புறுத்திக் கூற விரும்புகின்றோம்.

சமாதான முயற்சிகளை நாம் குழப்பமாட்டோம்; போரை நாமாக ஆரம்பிக்கவும்மாட்டோம்".

புலிகளிடமிருந்து இதைவிட வேறு என்ன உறுதி வேண்டும்?

புலிகளின் நிலைப்பாடு இப்படியிருக்க, புலிகள் போர்நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறுகிறார்கள்; அவர்களுக்குச் சமாதானத்தில் நாட்டமில்லை; பேச்சுவார்த்தை மேசைக்கு வருகிறார்கள் இல்லை; பேச்சுக்கான திகதியைத் தருகிறார்கள் இல்லை என்று அரசாங்கத் தரப்பில் புலிகள் மீது குற்றம்சுமத்தப்படுகிறது.

வெளிநாட்டு அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ அமெரிக்கா சென்று அங்கே பாதுகாப்பு உடன்படிக்கைகள் செய்துகொண்டிருக்கின்றார். 'புலிகளைப் பேச்சு மேசைக்கு வரச்செய்யுங்கள்; பேச்சுக்கு அவர்களிடம் திகதி வாங்கித் தாருங்கள்' என்று அமெரிக்கத் தலைவர்களுக்கு விண்ணப்பம் செய்கின்றார்.

இதன் மூலம் புலிகள் மீதான தவறான ஒரு கருத்தை அமெரிக்காவில் பரப்புகிறார். ஏற்கனவே புலிகள் இயக்கத்தைப் பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் சேர்த்துக்கொண்டுள்ளது அமெரிக்கா. புலிகள் மீது, அமெரிக்காவை கடும் வெறுப்பும் எரிச்சலும் கொள்ளச்செய்வதற்குத்தான் அமைச்சரின் இந்த முயற்சி என்பது அனைவருக்கும் இப்போது தெளிவாகிவிட்டது.

புலிகளைப் பற்றித் தவறான கருத்துக்களை பரப்புவதில் சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகளும் இப்போது முழு வீச்சாக இறங்கிவிட்டன.

'சமாதான முயற்சிகளுக்கு அனுசரணை வழங்கும் நோர்வேக் குழுவின் தலைவர் ஹெல்கிஸனைக்கூட புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் இப்போது சந்தித்துப் பேசவிரும்புகிறாரில்லை.

அவரைச் சந்திக்க ஹெல்கிஸன் கொழும்பிலிருந்து நோர்வே திரும்பும் வழியில் லண்டன் சென்றபோது பாலசிங்கம் நழுவி சுவிற்ஸர்லாந்து சென்றுவிட்டார்' என்று 'சண்டே லீடர்' ஆங்கிலவாரப் பத்திரிகை செய்திவெளியிட்டிருக்கின்றது. சுவிற்ஸர்லாந்தில் அரசாங்க உயர் அதிகாரிகளைச் சந்தித்துப் பேசுவதற்கு பாலசிங்கத்தை அங்கே அனுப்பியது நோர்வே அரசாங்கம்தான். பாவம் 'சண்டே லீடர்' பத்திரிகைக்கு இந்த விடயம் தெரியாமற்போய்விட்டது.

தெரிந்தோ, தெரியாமலோ இப்படித் தவறுகள் எல்லா மட்டங்களிலும் செய்யப்படுகின்றன. இதனால் சாகப்போவது சமாதானம்; பாதிக்கப்படப் போகிறவர்கள் இந்த நாட்டுப் பொதுமக்கள்; புலிகள் அல்ல.

# விடுதலைப் புலிகளின் கோரிக்கைகள் நிறைவேறினாலே நிகழ்ச்சி நிரல்

## தயாரிக்கமுடியும் என்கிறது நோர்வே

கொழும்பு,ஜுன்19

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான நேரடிப் பேச்சுக்கான நிகழ்ச்சி நிரல், புலிகளின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டாலே சாத்தியமாகும் என்று கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரகம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் நோர்வேத் தூதரகத்தால் கொழும்பில் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

போர்நிறுத்த ஒப்பந்த விதிமுறைகளையும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள நல்லெண்ண நடவடிக்கைகளையும் முழுமையாக நிறைவுசெய்வது மட்டுமன்றி, தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையும் நீக்கப்பட்டால் மாத்திரமே நேரடிப் பேச்சுவார்த்தையில் பங்குபற்றமுடியும் என்று விடுதலைப் புலிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

அதுமட்டுமன்றி, இடைக்கால நிர்வாகம் பற்றிய விடயமும் முக்கியமான ஒன்றாக விடுதலைப் புலிகள் தரப்பால் வலியுறுத்தப்பட்டு வருகின்றது. விடுதலைப் புலிகளின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத பட்சத்தில் தாய்லாந்தில் நடைபெற இருக்கும் நேரடிப் பேச்சுவார்த்தைக்கான திகதியும், நிகழ்ச்சி நிரல் தயாரிப்பதும் சாத்தியமற்றதாக இருக்கும்.

இருதரப்பும் இணங்கியே இதற்கான தீர்வினை எடுக்கவேண்டும். இல்லாதவிடத்து இத்திகதி மேலும் பின்னோக்கியே செல்லும் - என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஒ-12-4)




# படத்தைப் பார்த்தே அஞ்சும் படையினர் பிரபாவை நேரில் கண்டால் என்னாவர்?

## வேலணையில் சிவாஜிலிங்கம் எம்.பி. கேள்வி

யாழ்ப்பாணம்,ஜுன்19

தலைவர் பிரபாகரன் இராணுவச் சீருடையில் காணப்படும் படத்தைப் பார்க்கக்கூட கடற்படையினருக்கு அச்சம் என்றால் அவரை நேரில் பார்த்தால் என்னாவார்களோ?

நேற்றுமுன்தினம் மாலை வேலணைத் துறையூர் சனசமூக



நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகளின் அரசியற் பிரிவினருடன் தீவகத்திற்குச் சென்ற யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் அங்கு இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றுவதையும், புலிப் பிரமுகர்கள் அருகே அமர்ந்திருப்பதையும் படத்திற் காணலாம். தேர்தல் பிரசாரத்திற்காக தீவகத்திற்குக் கூட்டமைப்பினர் சென்றபோது நடந்த தாக்குதலில் சிவாஜிலிங்கம் படுகாயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

நிலைய முன்றிலில் விடுதலைப் புலிகளின் அரசியற் பணிக்குழுவினரை வரவேற்று அப்பகுதி மக்கள் நடத்திய கூட்டத்தில் உரையாற்றிய யாழ்.மாவட்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

தீவுப் பகுதிக்குச் சென்றிருந்த விடுதலைப் புலிப் பிரமுகர்கள் ஊர்காவற்றுறைப் பகுதியில் தலைவர் வே.பிரபாகரன் இராணுவச் சீருடையில் உள்ள படங்களை விநியோகித்தபோது கடற்படையினர் அதை விநியோகிக்கத் தடைவிதித்தனர். இந்தச் சம்பவத்தின் பின்னர் நடந்த கூட்டத்தில் உரையாற்றியபோதே எம்.கே.சிவாஜிலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் :

கடற்படையினர் இன்று விடுதலைப் புலிகளின் அரசியற் பணிக்குழுவினர்மீது மேற்கொள்ளும் கெடுபிடிகளைப் பார்க்கும்போது புரிந்துணர்வு உடன்படிக்கையை அரசு விடுதலைப் புலிகளுடன் ஒரு நல்ல உள்நோக்கத்துடன் செய்துகொள்ளவில்லை என்றே தோன்றுகிறது. பிரபாகரனின் படத்தை விநியோகிக்க வேண்டாம் எனத் தடுத்தது எவ்வகையிலும் நியாயமற்றது. கடற்படை அர்த்தமற்ற காரணங்களை முன்வைத்து விடுதலைப் புலிகளின் செயறபாட்டைத் தடுக்க முயல்கிறது.

கடந்த அரசில் ஜனாதிபதி சந்திரிகா சில தமிழ்க் கட்சிகளுடன் சேர்ந்துநின்றுகொண்டு புலிகளை ஓரங்கட்டி தமிழ் மக்களுக்குத் தீர்வு வழங்குவேன் என்று முழக்கமிட்டார். ஆனால், அந்த முழக்கம் இப்போது தவிடுபொடியாகியுள்ளது. காரணம் "தமிழ்மக்கள் வேறு புலிகள வேறல்ல". தமிழினத்தின் ஒட்டுமொத்த சக்திதான் இன்று புலிகள் தீவகம் வருவதற்குக் காரணம். புலிகளின் கட்டுநாயக்கா விமானநிலையத் தாக்குதலும் அரசு இப்புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடக் காரணமாக அமைந்தது.

எனவே, அரசு புரிந்துணர்வு உடன்படிக்கையை அமுல்படுத்துவதில் தீவிர கவனம் செலுத்தவேண்டும்.

தொடர்ந்தும் அரசு இழுத்தடிப்புச் செய்யுமானால் தமிழீழம் என்னும் தனிநாடு உருவாவதை யாராலும் தடுக்க முடியாது. எங்களுடைய வாழ்க்கையை நாங்களே தீர்மானிக்க பிரிந்து செல்லவேண்டிய கட்டாயம் ஏற்படும் என்று அவர் தெரிவித்தார். (ஒ)

# தீவகத்தில் நிகழ்ந்தவை

யாழ்ப்பாணம்,ஜுன்19

நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவினர் தீவகத்துக்கு சென்றபோது இடம்பெற்ற சில சுவாரஷ்யமான சம்பவங்களில் சில.....

☆ ☆ ☆

தீவகத்துக்குள் விடுதலைப் புலிகளை அனுமதிப்பது தொடர்பாக கடற்படையினரே முன்னர் பல சர்ச்சைகளைக் கிளப்பியிருந்தனர். ஆனால், நேற்றுமுன்தினம் புலிகளை உடற்பரிசோதனை செய்து அனுமதிப்பது தொடர்பாக இரு கடற்படை அதிகாரிகளுக்கு இடையில் கருத்து வேறுபாடு உருவாகி அது கடும் வாக்குவாதமாகத் தொடர்ந்தது. ஒருவர் பரிசோதனை செய்யவேண்டும் என்றும், இன்னொருவர் பரிசோதிக்கக் கூடாது என்றும் கடுமையாக வாக்குவாதப்பட்டனர். இறுதியில் இந்த வாக்குவாதத்தை முடிவுக்கு கொண்டுவர இங்கிருந்து போனவர்களே தலையிட வேண்டியிருந்தது.

☆ ☆ ☆

கூட்டங்கள் மற்றும் நிகழ்களின்போது படையினரும் பொதுமக்களைப்போல சிவில் உடையில் மக்களோடு மக்களாக நின்றிருந்தனர். அவர்களை இலகுவாக இனங்கண்ட புலிப் பிரமுகர்கள் அவர்களுடன் சென்று உரையாடியபோது அவர்கள் பெரும் சங்கடத்திற்குள்ளானதை அவதானிக்க முடிந்தது. பின்னர் புலிகள் அப்பகுதியில் வீடியோப்படம் பிடித்த சமயத்தில் சிவில் உடையில் நின்றவர்கள் நழுவிச் சென்றனர்.

☆ ☆ ☆

புலிகள் ஊர்காவற்றுறையில் இருந்து மெலிஞ்சிமுனைக்குச் சென்றுகொண்டிருந்தபோது இடையே தமிழ்கட்சி ஒன்றின் மிக முக்கிய பிரமுகர் ஒருவர் எதிரே மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்தார். தற்செயலாக நிகழ்ந்த இந்தச் சந்திப்பில் திணறிப்போன தமிழ்க்கட்சிப் பிரமுகர் புலிகளின் வாகனங்களுக்கு வழிவிட்டு ஒதுங்கினார். வாகனங்களுக்கு வழிவிட்ட அவரை அடையாளங்கண்டுகொண்ட புலிப் பிரமுகர் அவரைத் தனது சகாக்களுக்கு அறிமுகம் செய்துவைத்தார். இதனால் தமிழ்க்கட்சிப் பிரமுகர் சங்கடமான நிலையுடன் அவ்விடத்தில் இருந்து அகன்றார்.

☆ ☆ ☆

தலைவர் பிரபாகரன் இராணுவச் சீருடையில் உள்ள படத்தைக் கண்ட படையினர் அதை ஆவலுடன் பார்வையிட்டனர். கடற்படை அதிகாரியும் அப்படத்தை வாங்கிப் பார்வையிட்டார். கடற்படை சிப்பாய்கள் அந்தப் படங்களை மடிக்காமல் அப்படியே சுருட்டி பத்தரப்படுத்தியதையும் காணக்கூடியதாக இருந்தது. பின்னர் அதனை விநியோகிக்கத் தடை விதித்தது வேறுவிடயம்.

☆ ☆ ☆

வேலணை துறையூரில் நடைபெற்ற விடுதலைப் புலிகளை வரவேற்கும் கூட்டத்தை எதிரே தமது அலுவலகத்தில் நின்று மதிலுக்கு மேலாக குறித்த தமிழ்க் கட்சி உறுப்பினர்களும் பார்வையிட்டனர். கூட்டத்தின் மத்தியிலும் சில உறுப்பினர்கள் காணப்பட்டனர். அவர்களில் சிலரை அடையாளங்கண்ட புலி உறுப்பினர்கள் அவர்களுடன் அளவளாவினர். ஆனால் அடுத்த சில நிமிடங்களில் தமிழ்க்கட்சி உறுப்பினர்கள் மாயமாகினர்.

# வடமராட்சிக்கு நேரடி தொலைபேசிச் சேவை

வடமராட்சி,ஜுன்19

பருத்தித்துறையில் புதிதாகத் திறக்கப்பட்டுள்ள தொலைத்தொடர்பு பரிவர்த்தனை நிலையத்தின் மூலம் இனிமேல் வடமராட்சிக்கான தொலைபேசித் தொடர்புகளை நேரடியாகப் பெற்றுக்கொள்ளமுடியும். யாழ்.ரெலிகொம் அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போது வடமராட்சிப் பகுதிகளில் சேவையில் உள்ள இணைப்புகளில் 3 இலகத்திற்கு முன்னால் 6 என்ற இலக்கத்தைச் சேர்த்து அழுத்துவதன் மூலம் வடமராட்சிக்கான தொடர்பை நேரடியாக பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த 92 கேபிள் இணைப்புக்களுக்கான தொடர்புகளே இப்போது முதற்கட்டமாக வழங்கப்பட்டுள்ளன. (ஒ)

## நாளை


ஆனி 6
வியாழக்கிழமை
(20.06.2002)
திதி : தசமி
நண்பகல் 12.02 வரை.
நட்சத்திரம்: சித்திரை
பிற்பகல் 3.15 வரை.
கரிநாள்
பாபஹர தசமி தினம்
சுபநேரம் : 7.24 - 8.54
ராகுகாலம் : 1.24 - 2.54
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

பருத்த உடலைப் பெற்றிருப்பது, உண்மையான வலிமை ஆகாது. மன வலிமையே சிறந்த வலிமையாகும்.

19 ஜூன் 2002

# தியாகிகள் தினம்



எமது மக்களின் உடனடித் தேவை அமைதி, சமாதானம், ஜனநாயகம் என்பதை முன்னுணர்ந்து செயற்பட்ட நீங்கள் அதற்கு விலையாக உங்கள் உயிரைக் கொடுத்தீர்கள்.

இன்றும் எமது மக்கள் அவாவிநிற்பது யுத்தமற்ற அமைதியான வாழ்க்கை, நீடித்த சமாதானம், அடிப்படை ஜனநாயக உரிமைகள் என்பவையே. இந்தத் தீவில் மீண்டும் இடம்பெறும் யுத்தத்திற்கான முன்தயாரிப்புக்கள் கண்டு அவர்கள் வெறுப்படைந்துள்ளார்கள், வேதனை கொண்டுள்ளார்கள்.

இன்று எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற நீங்கள் முன்னெடுத்த சமாதானப் பாதையில் மக்களின் நல்வாழ்விற்காக தொடர்ந்து உழைப்போம் என உங்கள் நினைவு நாளில் உறுதி எடுத்துக்கொள்கிறோம்.

வன்முறையும், படுகொலைகளும், அழிவுகளும், துயரங்களும் நிறைந்த, கசப்புக்கள் மிகுந்த கடந்த காலம் ஒழிந்துபோக அனைவரும் பாடுபடுவோம்.

**ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ்.)**

யாழ்.பிராந்திய அலுவலகம், 310, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(4952)

# தூய்மையான நிர்வாகத்தின் மூலம் மக்கள் வாழ்வை மேம்படுத்துவோம்

## நீதித்துறைப் பொறுப்பாளர் உறுதி

யாழ்ப்பாணம்,ஜூன்19

தூய்மையான நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்கி எமது மக்களின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கு பணியாற்றுவோம். விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் தீவகப் பிரவேசம் மேற்கொண்டதையொட்டி வேலணைத் துறையூரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் நீதிநிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்:-

'இங்கே வருகைதரும் எம்மை, வரவேற்கும் நிகழ்வுகளில் மக்களை கலந்து கொள்ளவிடாது தடைகள் போடப்பட்டபோதும் அவற்றை மீறி பெருந்தொகையான மக்கள் எம்மை வரவேற்றுள்ளனர். தீவக மக்கள் முகங்களிலே இப்போது பரவசமும், மகிழ்ச்சியும் தென்படுகின்றன.

தமிழீழப் பகுதியில் மட்டுமல்ல தென்னிலங்கையிலும் தமிழ்ப் பண்பாட்டை வளர்த்தவர்கள் தீவக மக்கள். தனிநாயகம் அடிகளார் போன்ற தமிழ் பண்பாட்டாளர்கள் இம் மண்ணில்தான் உதித்தார்கள்.

நாம் இங்கு வந்து கிராமங்களுக்கு சென்று அம்மக்களைப் பார்த்துள்ளோம். அவர்கள் மிகவும் வறிய நிலையில்தான் வாழ்கின்றார்கள், சில பாதைகள் போடப்பட்டு இருக்கலாம், சில கட்டடங்கள் கட்டப்பட்டு இருக்கலாம். ஆனால், மக்களின் வாழ்வு நிலையை மேம்படுத்த எந்த நடவடிக்கைகளும் எடுத்ததாகத் தெரியவில்லை.

நாம் வருவதற்கு முன் இங்கு வாழும் மக்கள், இராணுவத்துடன் நிற்கின்றனர், ஈ.பி.டி.பியுடன் இருக்கின்றனர் என்று பல கதைகள் கூறப்பட்டன. ஆனால், நாங்கள் அதை நம்பவில்லை. மக்களை அப்படி வேறுபடுத்திப் பார்க்கவும் இல்லை.

இம்மக்கள் எல்லோரும் தமிழ்மக்கள்; எங்களுடைய மக்கள். அதனடிப்படையிலேயே செயற்படுவோம். உங்களை எந்த அடக்குமுறைக்கும் உள்ளாக்காமல் நாங்கள் தவறுவிட்டாலும் நீங்கள் தட்டிக்கேட்கும் வகையில் செயற்படுவோம்.

இங்கே நாம் பார்க்கின்றபோது ஆயுத கலாசாரம்தான் கண்ணுக்குத் தெரிகிறது. சில குழுக்கள், ஆயுதப் படையினர் மக்கள் முகம் சுழிக்ககூடியவகையில் ஆயுதங்களுடன் எம்முன்னே நடமாடிக்கொண்டு இருக்கின்றனர்.

ஆனால், ஒன்றை மட்டுமே கூறுகிறோம். விடுதலைப் புலிகள், பார்க்காத ஆயுதமும் இல்லை, அவர்கள் பயன்படுத்தாத போர்த்தளபாடங்களும் இல்லை. ஆனால், இன்று ஆயுதம் எதுவும் இன்றி அரசியல் பணிசெய்ய வந்துள்ளோம். எமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில்கூட ஒரு போதும் ஆயுதங்களைக் காட்டி நாம் காரியம் சாதித்ததில்லை.

எமது தலைவரின் திறமைவாய்ந்த இராணுவச் செயற்பாடுகள்தான் பலருக்குத் தெரியும். அவரின் அரசியல் செயறபாடுகளையும், மக்கள் மட்டத்தில் அவரின் அணுகுமுறையும் சிலருக்குத் தெரியாது. இனிவரும் காலங்களில் எமது திறமையான செயற்பாடுகளைப் பார்க்கப் போகிறீர்கள்.

நாம் வரும்போது பலமான நிலையிலேயே இங்கே வந்துள்ளோம். இந்நிலையில்தான் எமது தலைவர் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையொப்பம் இட்டுள்ளார். நாம் ஒரு போதும் புரிந்துணர்வுஉடன்பாட்டிற்கு எதிராகச் செயற்படமாட்டோம்.

புரந்துணர்வுஉடன்பாட்டில் உடன்பாடுகண்ட விடயங்கள்கூட அரசினால் நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஆயுதப்படையினர், பாடசாலைகளிலும், பொதுஇடங்களிலும் அந்நிய நாடு ஒன்றுடன் சண்டைக்கு நிற்பது போல் நிற்கின்றனர்.

பத்திரிகைகளில் எல்லாம், காரியாலயங்கள் திறப்பதும், கடைகள் திறப்பதுமாக செய்திகள் உள்ளன. ஆனால், மக்களின் வாழ்வுநிலை மிகவும் மோசமாக உள்ளது. பிச்சை எடுப்பவர்களின் தொகைதான் அதிகரித்துள்ளன.

எனவே நாம் இங்கு தூய்மையான நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்கி, எம் மக்களின், சமூக பொருளாதாரம் மேம்பட உழைப்போமென உறுதி கூறுகிறோம் என்று அவர் கூறினார். (ஓ)

# விஞ்ஞான வினாவிடை போட்டி; முதல் சுற்றின் முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஜூன்18

யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களின் விஞ்ஞான அறிவை மேம்படுத்தும் நோக்குடன் யாழ் பல்கலைக் கழக விவசாய பீட மாணவர் ஒன்றியம் நடத்திய வினாவிடைப் போட்டியின் முதல் நிலை முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

மறைந்த விவசாயபீட மாணவர்களான ஜி.கிருபாகர் மற்றும் ரி. ஜெயக்குமார் ஆகியோர் நினைவாக கடந்த 4ஆம் திகதி நடத்தப்பட்ட இந்தப் போட்டியின் முதல் சுற்றில் 4 பாடசாலைகளுடன் 10 மாணவர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

ஹாட்லி கல்லூரி, புனித பரியோவான் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி, கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரி போன்ற பாடசாலைகளே 2ஆம் கட்ட வாய்மொழி போட்டிக்கு தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளாகும்.

நடைபெற்ற போட்டியில் முதன்னிலையில் இருக்கும் மாணவர்களின் விவரம் வருமாறு:-

எஸ்.பகீரதன் (ஹாட்லி), எஸ்.காண்டீபன் (ஹாட்லி), ஆர்.கீர்த்தனா (வடமராட்சி மத்திய மகளிர்), என்.சிவாகரன் (புனித பரியோவான்), எஸ்.கஜேந்திரன் (ஹாட்லி), எஸ்.கர்ணன் (புனித பரியோவான்), வி.தனுஷன் (புனித பரியோவான்), எல்.கேதார சர்மா (யாழ். இந்து), எஸ்.குமரேசன் (கரவெட்டி விக்னேஸ்வரா), எ.நிஷாந்தன் (யாழ். இந்து).

போட்டியின் 2ஆம் கட்ட நிகழ்வு எதிர்வரும் 29ஆம் திகதி விவசாய பீடத்தில் நடைபெறவிருக்கின்றது.

(ஓ-13)




ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்திய கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் வெற்றிபெற்ற யாழ். பல்கலைக்கழக அணியின் தலைவர் ஆர்.சாஜகான், பிரதமவிருந்தினர் சின்னத்தம்பியிடமிருந்து வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டபோது எடுக்கப்பட்ட படம்.

# அடிப்படை உரிமைகள் என்ற பெயரில் அடாவடித்தனங்களை ஊக்குவிப்பதா?

## அழிவின் விளிம்பில் நாம்.....!

### சிந்தனைத்தொடர்-4

### ஆத்மசொரூபன்

இன்று உலகெங்கும் மக்கள் அமைதிக்காக ஏங்குகிறார்கள். ஏற்கனவே கூறப்பட்டுள்ளதுபோல தலை வலிக்கும் போதுதான் ஐயோ தலை வலிக்கிறது என்று தலையை நினைத்துக் கவலைப்படுகின்றோம். தலை ஆரோக்கியமாயிருந்த பொழுது தலைவலி ஏற்படுவதற்குரிய கைங்கரியங்களிலேதானே ஈடுபட்டோம். நூறு வருடங்களிற்கு முன்பு சூழல் மாசடைவு ஏற்பட்டிருந்ததா? ஓசோனில் ஓட்டை ஏற்பட்டு பூமிக்கு ஆபத்து ஏற்பட்டிருந்ததா? அன்று சுத்தமான காற்று, சுத்தமான நீர், ஆரோக்கியத்தைக் கொடுக்கக் கூடிய பழவகைகள், காய்கறிகள் அனைத்தும் கிடைத்தன. ஆரோக்கியமாகவே வாழ்ந்தான். என்னும் மனிதன் அந்த ஆரோக்கியத்தை நினைத்து ஆனந்தமடைந்தானா? நிறைவுபெற்றானா? அமைதி பெற்றானா? இல்லை. ஆரோக்கியக் கேட்டிற்கான விடயங்களில், அமைதியைக் குழப்பும் விடயங்களில்லவா விஞ்ஞானிகள் என்று சொல்லப்படுபவர்களுட்பட மனிதர்கள் ஈடுபட்டார்கள். அதனாலேயே இன்று சூழல் மாசடைதல், அழிவுகள், ஆரோக்கியக் கேடுகள். இயற்கை தன்னளவில் ஆரோக்கியமானது, அமைதியானது, சமனிலையை பேணக்கூடியது. இதை அறியாதவர்களாலேயே, இதை அறிந்து அமைதி அடைய, ஆனந்தமடைய, விரும்பாதவர்களாலேயே, முடியாதவர்களாலேயே இன்று இவ்வளவு அனர்த்தங்கள், அழிவுகள். நகரங்களிலும் பல்கலைக்கழகங்களிலும் ஏன் அரசியலிலும்கூட அமைதியைக் குழப்புவது மனிதனே. இதை அறிந்த மகா ஞானிகள் அன்றும் இன்றும் இயற்கையைக் குழப்பாது அமைதியடைந்தார்கள்; அமைதியடைகிறார்கள்; இயற்கையோடு இயற்கையாகிறார்கள். அதனால்தான் எம்மை எல்லாம் வழிநடத்தக்கூடிய உயர்ந்த நெறிகளையெல்லாம் எமக்கு அள்ளி வழங்கினார்கள்; வழங்குவார்கள். அவைதான் உயர்ந்த கலாசாரம், ஆன்மீகம். ஆனால், நாம் அதைக் கவனிக்கிறோமோ? இல்லை. அமைதியைக் குழப்பும் விடயங்களில்லவா உலகம் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது.

பணம், பதவி, பட்டம், கண்டுபிடிப்புக்கள் மூலம் அமைதியடைந்துவிடலாம் என்று முயன்றதாலேயே அராபியர்கள் உட்பட மேற்குலகம் கிழக்கை நோக்கிப் படையெடுத்து வந்தது. அதனால் இங்கிருந்த அமைதியும் அழிந்தது, கலாசாரம் சிதைந்தது, சமூகச் சீரழிவு தலை தூக்கித் தாண்டவமாடுகிறது. இன்றும்கூட மேற்குலகால் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் கலாசாரச் சிதைவு, சமூகச் சீரழிவு கணக்கிலடங்கா. எனினும் மனிதர்கள் அதைக் கவனிப்பதாகத் தெரியவில்லை. ஓடும் வெள்ளத்துடன் அடித்துச் செல்லப்பட்டுக் கொண்டேயிருக்கிறார்கள். 50 வருடங்களிற்கு முன்பெல்லாம் பிள்ளைகள் பெற்றோருக்கு, பெரியவர்களுக்கு, ஆசிரியர்களுக்கு கீழ்ப்படிந்து நடந்தார்கள். மனைவி கணவனுக்குக் கட்டுப்பட்டு நடந்தாள். ஆனால், இன்று நிலைமை என்ன? பிள்ளைகளுக்கு பெற்றோர்கள், ஆசிரியர்கள் பயப்படும் நிலை. பெரியவர்களைக் கண்டால் சிறுவர்கள் **ninety (90)** என்று இழிவுபடுத்தும் நிலை. இன்று **twenty (20)** ஆகியிருப்பவர்களும் **ninety (90)** ஆக வரும்பொழுது இழிவுபடுத்தப்படுவார்கள் என்பதைக் கூடத் தெரிந்துகொள்ளமுடியாத புத்தக அறிவுதான் இன்று. இவை எல்லாம் ஏன் ஏற்பட்டது? முன்னர் புராணங்கள், இதிகாசங்களெல்லாம் ஞானிகளின் போதனைகளெல்லாம் அவர்களின் கடமையைத்தான் வலியுறுத்தின. ஒவ்வொருவரினதும் கடமை நிறைவேற்றப்பட்டபோது மற்றவர்களது தேவைகள், நிறைவுபெற்றன. அமைதி கிடைத்தது.

*இல்வாழ்வான் என்பான் இயல்*
*புடைய மூவர்க்கும்*
*நல்லாற்றி நின்ற துணை*

- இதுதான் வாழ்க்கை நெறி. இதைத்தான் யேசுநாதர் வேறு விதமாக உன்னைப்போல் உன் அயலவனை நேசி என்றார். இதன்படி மனிதன் ஒழுகுகிறானா? இல்லை. எதிர்மாறாகவே செயற்படுகிறான். இன்று மனித உரிமை, சிறுவர் உரிமை, பெண் உரிமை... கல்வி எமது அடிப்படை உரிமை.... என்ற கோஷங்களை சிறுவர், பெரியவர் என்ற எல்லா நிலையிலும் விதைக்கின்றான். இதனால் மக்கள் தமது கடமையைக் கைவிட்டு உரிமையைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். இதன் விளைவுதான் ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் ஏன் யுததங்கள கூட. இவற்றின் விளைவு அழிவுகள், அனர்த்தங்கள், அமைதியின்மை. எமது கல்வி, வாள, பொல்லு, கலலு ஆகியவற்றை தூக்கும் நிலைக்கு மாணவர்களைத் தள்ளுவதா? ஒழுங்கைகளிலும், பொது இடங்களிலும் காதல் ஜோடிகள் சல்லாபம் புரியவைப்பதா? கணவன முன்னிலையில் மனைவியுடன் அங்க சேஷ்டைபுரியத் தூண்டுவதா? கணவன் தடுக்கும்பொழுது கணவனையும் பிறரையும் தாக்கும் நிலைக்கு தள்ளுவதா? பகிடிவதை மூலம் கொலை செய்யத் தூண்டுவதா? இவைகளெல்லாம் அடிப்படை உரிமையா? இத்தகைய கல்வியும் வேண்டாம், இத்தகைய அடிப்படை உரிமையும் வேண்டாம்.

*கற்கக் கசடற கற்பவை கற்றபின்*
*நிற்க அதற்குத் தக.*
*கற்றதனாலாய பயன் என்கொல் வாலறிவன்*
*நற்றாள் தொழாரெனில்*

கற்றதனாலாய பயன் என் கொல உத்தியோகம் பெறுவதல்ல, பணம் சம்பாதிப்பதல்ல, ஒழுக்கத்தைக் கற்று அதன்படி நிற்றலே, கடவுளை வணங்குதலே. **End of the educa -tion should be character, not anything else.**

'பாடசாலைக்கு பிள்ளைகள் அனுப்பப்படாவிட்டால் பிள்ளைகள் பொருள்களை வாங்கும்போதும் ஏமாற்றப்படுகின்ற அபாயத்தை எதிர்நோக்குவர்' என்ற ஒரு வாசகமும் கல்வி பற்றிய பிரசாரத்திலுள்ளது. தொழில்சார் படிப்புக்களில் பிறருக்கு ஆசையை ஊட்டி பொருளகளை விற்கும் கபடமும், மக்களை பணத்திற்காக, பதவி உயர்வுக்காக வேலை செய்விக்க ஊக்குவிக்கும் இழிநிலை இருக்கிறதே. இதை அகற்ற எந்த அமைப்பினாலும் முடியுமா?

சில பிரசாரங்கள் பெற்றோர், பிள்ளைகள், ஆசிரியர்கள் ஆகியவர்களுக்கிடையே இடைவெளியை ஏற்படுத்தி கீழ்ப்படிவின்மையை வளர்த்து, எதிராகச் செயற்படும் நிலைமையை ஏற்படுத்துகின்றன. பெற்றோருடைய பிழையை பெற்றோருக்கும், பிள்ளைகளுடைய பிழையைப் பிள்கைளுக்கும் சொல்வதுதான் முறை. பிள்ளைகளின் நல்வாழ்விற்கு பெற்றோருடன் இணைந்து செயற்படவேண்டுமே தவிர, பிள்ளைகளுடன் இணைந்து பெற்றோர்களுக்கு எதிராகப் போராடுவதல்ல. எனவே, இச்சீரழிவை ஏற்படுத்துபவர்களுக்கு எதிராக உடன் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

மதமாற்றம் என்ற பெயரில் இன்னுமொரு கலாசாரச் சிதைவு, சமூகச் சீரழிவு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது.

இன்று மதம் என்பது ஆள்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நடவடிக்கையாகவே இருக்கின்றது. இதற்கு எல்லா கபடங்களும் பயன்படுத்தப்படுகின்றன. யேசுநாதர் அயலானை நேசிக்கத்தான் சொன்னார், **My life is my message,** என்னுடைய வாழ்க்கையே என்னுடைய செய்தி என்றுதான் எல்லா மகான்களும் கூறுகிறார்கள். அதன் அர்த்தம் அவரைப்போல வாழ முற்படவேண்டும் என்பதே. **I'am the light.** நானே உலகின் ஒளி என்கிறார் யேசுநாதர். அதன் கருத்து எங்களையும் அந்த ஒளியாகும் நிலைக்கு அழைக்கிறார். போகச் சம்மதமா? அல்லது வசதிகளைக் காட்டி, மதம் மாற்றி ஏற்கனவே இருந்த நம்பிக்கைகளையும் இழக்கச் செய்து, தீயவர்களாக்கி, சமூகச் சீரழிவை ஏற்படுத்துவதா?

ஒதுக்குப்புறமான இடத்தில் இருந்து இதயசுத்தியுடன்தானே இறைவனை வணங்கும்படி சொல்லப்பட்டிருக்கிறது. பொது இடங்களில் நின்று எல்லோரும் பாராட்ட வேண்டும் என்று எண்ணி வழிபாடு நடத்தச் சொல்லி எங்கே கூறப்பட்டிருக்கிறது?

ஒருவனை நேசிக்க எனக்கு திருநீறு, சிலுவை, குல்லா, காவியுடை தடையாயிருக்குமென்றால் அதை நீக்க நான் தயாராக இருக்கின்றேன். சகோதரர்களே நீங்கள் தயாரா? பதிலளியுங்கள். கலாசாரச் சிதைவு, சமூகச் சீரழிவு ஆகியவற்றைக் கண்டும், அவற்றை விளங்கிக் கொள்ள முடியாதவர்களை, இவற்றைப் போக்க முன்வராதவர்களைத்தான் புத்திஜீவிகள், கல்விமான்கள் என்பதா? அப்படியானால் அவர்கள் சொல்லிக்கொள்ளட்டும்; நாம் சொல்லாதிருப்போம்.

(வளரும்)

## 'கூடுதல் கட்டணம் அறவிடக்கூடாது'

# பாதுகாப்பு நிலையங்களுக்கு மாநகர முதல்வர் எச்சரிக்கை

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களில் நிறுத்தப்படும் சைக்கிள்களுக்கு ஒரு ரூபாவும் மோட்டார் சைக்கிள்களுக்கு 2 ரூபாவும் மட்டுமே கட்டணமாக அறவிடப்படவேண்டும் என்று யாழ்.மாநகர முதல்வர் செல்லன் கந்தையன் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் அவர் கூறுகையில், வாகனப் பாதுகாப்பு நிலையங்களில் வழங்கப்படும் சீட்டுக்களின் பிற்பகுதியில் யாழ் மாநகர சபை ஆணையாளரின் முத்திரை பொறிக்கப்பட வேண்டும். அவ்வாறு முத்திரையிடப்படாத சீட்டுக்களை வழங்குவோர் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

எனவே பாதுகாப்பு நிலையங்களில் தமது வாகனங்களைப் பாதுகாப்புக்காக நிறுத்துவோர் மேற்கூறப்பட்ட நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றனவா? என்பதனை அவதானித்து அதனை மீறுபவர்களின் விவரங்களை ஆதாரத்தோடு எமக்கு அறியத் தரவும். இவ்வாறு மாநகர முதல்வர் தெரிவித்துள்ளார். (ஒ-ரி)

# 26ஆம் திகதி தொடக்கம் இறைதியான வழிபாடு

## சென்.பற்றிக்ஸ் மைதானத்தில்

யாழ்ப்பாணம்,ஜூன்19

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள அருட்திரு.அகஸ்ரின் முண்டக்கட் தலைமையிலான இறைதியானக் குணமாக்கல் வழிபாடு எதிர்வரும் 26ஆம் திகதி புதன்கிழமை இரவு 7.00மணிமுதல் யாழ்.சம்பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதத்தில் நடந்த மேற்படி வழிபாடுகளில் ஆயிரக்கணக்கானோர் பங்குபற்றி உடல், உள, ஆன்மீகக் குணமடைந்தனர் என்றும், எதிர்வரும் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை புதுக் குடியிருப்பிலும் திருவிழிப்பு குணமாக்கல் வழிபாடு நடைபெறவுள்ளதாகவும் அருட்தந்தை பி.எஸ். ஜெபரட்ணம் தெரிவித்தார். (ஓ)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

கலர் மீன்கள், மீன் தொட்டிகள், மீன் தொட்டிக்குரிய மோட்டர்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 40/17, சீனியர் ஒழுங்கை, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.
(4862)

ஜமுனாபாரி ஆடுகளும் குட்டிகளும் குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.
(4946)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட, சுத்தம் செய்த வயீராபாம், புறொயிலர் இறைச்சிக்கோழி மற்றும் கீல்ஸ், சொயன்சியாஸ், பிக்போல்ஸ் மற்றும் கோழிப்பாட்ஸ் வகைகளும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: T. கரன், இல.150, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(4949)

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து (பாதிக் கோழி உட்பட) தினமும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.
(4944)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

ஜேர்மனி இன அல்சேஷன் நாய்க் குட்டிகள் (ஐம்பது நாள்கள் நிரம்பியவை) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T.கரன், இல.59, சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்.
(4950)

## தவறிவிட்டது

கைதடிமேற்கு, கைதடியைச் சேர்ந்த நாகன் லிங்கநாதன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (இல.803250391V)யும், விசேட அ. அட்டை (இல.091039988)யும் அச்சுவேலி பஸ்நிலையத்திற்கும் ஆவரங்கால் சந்திக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஆவரங்கால் அருளாம்பிகை சுவையகத்தில் கொடுத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.
(4955)

இலகடி, காரைநகரைச் சேர்ந்த செல்வரத்தினம் யோகராசா என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.680082030V) 13-06-2002 அன்று ஸ்ரான்லி றோட்டுக்கும் நாவலர் றோட்டுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 105, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும்.
(4962)

## மணமகள் தேவை

3ஆம் வருட கொம்பியூட்டர் விஞ்ஞானம் சித்தியடைந்த U.K. மணமகனுக்கு ஆங்கில அறிவுள்ள மணப்பெண் தேவை. 25 வயதுக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும். பொய்யாமொழி ஜோதிடம், ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோவிலடி, யாழ்ப்பாணம்.
(4926)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

தென்மராட்சி சிற்றூர்த்தி வாகனத்தில் முக்கிய ஆவணங்கள், உடுப்புகள் அடங்கிய இரண்டு 'பாக்' பயணிகளால் தவறவிடப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரங்களுடன் காரியாலய நேரத்தில் நேரில் வரவும்.
(4951)

## எழுதுநர் சேவை கிளைச்சங்கம் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூன்19

சுகாதாரத் திணைக்கள எழுதுநர சேவைக்கிளைச் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் எதிர்வரும் 21ஆம் திகதி திங்கட்கிழமை 12.30 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலையின் தேநீர் அறையில் நடைபெறவுளளது.

அனைத்து சுகாதார எழுதுநர் களையும் இந்நிகழ்விற்கு வருகை தருமாறு அமைப்பாளர் இ.பத்மநாதன் கேட்டுள்ளார். (ஓ-139)

## 'லங்கா பெல்லின்' பரீட்சார்த்த இணைப்புகள்

யாழ்ப்பாணம்,ஜுன்19

'லங்கா பெல்' நிறுவனத்தினால் யாழ். குடாநாட்டில் 18 தொலைபேசி இணைப்புகள் பரீட்சார்த்தமாக வழங்கப்பட்டுள்ளதாக அந்த நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை,நீர்வேலி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் தலா 6 இணைப்புகள் வீதம் இவை வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஓ-10)

## வசந்தபுரம் அபிவிருத்திக்கு ஏற்பாடு

வலி.கிழக்கு,ஜூன்19

தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் கிராம அபிவிருத்தி திட்டத்தின் கீழ் இருபாலை கிழக்கு வசந்தபுரம் கிராமம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

இங்கு மலசலகூடம்,வீடு, போக்குவரத்து,கல்வி,மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகளை உடனடியாக மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கோப்பாய் பிரதேச செயலர் கே.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (13-180)

## சேவைநலம் பாராட்டி வாழ்த்துகிறோம்



ஒளிமிக்க திசைகாட்டி எங்கள் உப அதிபர்

**திருமதி மே.தி.யோ.விமலதாஸ்**

எமது ஆசிரியராக, உப அதிபராக எமது கல்லூரியில் இருபத்தாறு ஆண்டுகள் ஆசிரிய சேவை புரிந்து தனது ஆளுமைச் சுவடுகளை அழுத்தமாகப் பதித்துச் செல்லும் எங்கள் உப அதிபர் இன்று போல் என்றும் இறையருள் பெற்று நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றோம். அமைதியைத் தன்னிடம் கண்டு மற்றவர்களும் சமாதானம் காணும் வகையில் தனது நடத்தையை வெளிப்படுத்தி ஆசிரியத்துவம் நிறைவுகாணும் வகையில் தன் பணியைச் செவ்வனே செய்து முத்திரை பதித்து தனது அறுபதாவது வயதில் ஓய்வு பெறும் அம்மையாரை நாம் நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகிறோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்,
யா/கன்னியர் மடம் ம.வி., யாழ்ப்பாணம்.

(4971)

## மக்கள் வங்கி அறிவித்தல்



மக்கள் வங்கி யாழ். ஸ்ரான்லி வீதிக்கிளை தன்னியக்கப் பணம் கொடுக்கும் இயந்திரம் மூலம் வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பு முதலான இன்னும் முக்கிய நகரங்களிலுள்ள கிளைகள் 90 உடன் இன்று (19.06.2002) புதன்கிழமை தொடக்கம் இணைய உள்ளது.

மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபைத் தலைவர் திரு.லால் நாணயக்கார அவர்களால் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு PET இயந்திரம் ஆரம்பித்து வைக்கப்படும். இன்றைய தினம் பின்வரும் கிளைகளும் அவரால் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்படும்.

முற்பகல்: 9.00 மணிக்கு *நெல்லியடிக் கிளை.*
10.00 மணிக்கு பருத்தித்துறை நீடித்த கருமபீடத்தை முழுமையான கிளையாக.
11:30 மணிக்கு உரும்பிராயில் ஒரு நீடித்த கருமபீடசேவை.
பிற்பகல்: 12.30 மணிக்கு *சங்கானைக்கிளை.*
2002-06-20 மு.ப. 9.00 மணிக்கு சாவகச்சேரியில் புதிய கட்டடத்தில் கிளையை ஆரம்பித்தல்.

- இந்நிகழ்வுகளில் சிரேஷ்ட பொது முகாமையாளர் திரு.W.J.மார்ட்டின் பெர்னாண்டோ அவர்களும் வட வலயம் உதவிப் பொது முகாமையாளர் அவர்களும் கலந்துகொள்வார்கள்.
- வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*பிரதேச தலைமை அலுவலகம்,*
*79, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.*
*தொ.பே. 021-2601, 2602, 2956.*

பிரதேச முகாமையாளர்,
யாழ்ப்பாணம்.

(C/22568)

## ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயம் கொக்குவில்

# ஆலய அர்ச்சகர் தேவை

மேற்படி ஆலயத்தில் மூன்று நேர நித்திய பூசை செய்வதற்கு அர்ச்சகர்களிடமிருந்து சுய விவரங்களடங்கிய விண்ணப்பங்கள் 24.07.2002 மாலை 4.30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

செயலாளர்.
ஸ்ரீ சாயி துர்க்கா தேவி ஆலயம்,
கோணாவளை ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
(4969)

உ

## காரைநகர் மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய 1008 சங்காபிஷேக விஞ்ஞாபனம்

**விநாயக அடியார்களே!**

நிகழும் சித்திரபானு வருடம் ஆனித் திங்கள் 7ஆம் நாள் (21.06.2002) வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிமுதல் விநாயகப் பெருமானுக்கு விசேட தீபாராதனை, பூசையுடன் சங்காபிஷேகம் ஆரம்பமாகும். அதனைத் தொடர்ந்து 11.00 மணிக்கு மூலஸ்தான விநாயகர் பூசை இடம்பெறும்.

*11.30 மணிக்கு சங்கீத கதாப் பிரசங்கம*
*நிகழ்த்துபவர்:* திருமுருக கிருபானந்தவாரியாரின் *பிரதம சிஷ்யன்*
சுழிபுரம் **நடேசன் சிவசண்முகமூர்த்தி** B.A.
*விடயம்:* "அறிவும் ஆற்றலும்"
*விசேட மேளக்கச்சேரி:* பிச்சையப்பா குழுவினர்.
நண்பகல் அன்னதானம் நடைபெறும்.

*அடியார்கள் வருக! திருவருள் பெறுக!!*

- 8ஆம் திருவிழா உபயகாரர்.

(4972)

## வடக்கு ~ கிழக்கு மாகாண பொதுச் சேவையின் உயிரியல் வைத்திய தொழில்நுட்பவியலாளர் (மின்னியல்/இலத்திரனியல்) வகுப்பு II பிரிவு 'ஆ'இற்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான

# திறந்த போட்டிப் பரீட்சை - 2002

"மேற்படி பதவிக்கு ஆள்சேர்ப்பு செய்வதற்கான வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2002.06.21 ஆகும்.

"இது தொடர்பான மேலதிக விவரங்கள் 1239ஆம் இலக்க 2002ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் திகதி வெள்ளிக்கிழமை பகுதி IV (அ) மாகாண சபைகள் என்ற இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு வர்த்தமானிப் பத்திரிகையிலும் வடக்கு - கிழக்கு மாகாண இணையத்தளத்திலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது."

*இணையத்தளமுகவரி:* ppscnep @ sltnet.lk

வே.பொ.பாலசிங்கம்
*செயலாளர்,*
*மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,*
*வடக்கு - கிழக்கு மாகாணம்.*
(C/22565)

# மரண அறிவித்தல்கள்

## நாகலிங்கம் மகாலிங்கம்

*(ஓய்வுபெற்ற நில அளவை அத்தியட்சகர்)*

கற்கோவளத்தைப் பிறப்பிடமாகவும் மட்டக்களப்பை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் மகாலிங்கம் 17.06.2002 திங்கட்கிழமை மட்டக்களப்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சிவகாமிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தம்பிஐயா மற்றும் செல்வநாயகி ஆகியோரின் அன்பு மருமகனும் இராசசோதியின் அன்புக் கணவரும் குமுதினி (விரிவுரையாளர், விவசாயக் கல்லூரி, வவுனியா), நந்தினி (பொறியியலாளர், கோட்டே ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்), மாதினி (தொழில் நுட்ப உத்தியோகத்தர், பிரதேச சபை, ஏறாவூர்), ராஜ்குமார் (ஆசிரியர், மட்டுநகர் கல்லடி விபுலானந்த வித்தியாசாலை), சிவகுமார் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், நீர்ப்பாசனத் திணைக்களம், களுவாஞ்சிக் குடி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சந்திரகாந்தன் (நிறைவேற்றுப் பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை, வவுனியா), கமலதாஸன் (பொறியியலாளர், J.D.C., Trading, Colombo) ஆகியோரின் அன்பு மாமனாரும் ரஞ்சினியின் பேரனும் காலஞ்சென்ற ராசலிங்கத்தின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (18.06.2002) செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முகவரி:
*26, ஞானசூரிய சதுக்கம்,*
*2ஆம் குறுக்கு, மட்டுநகர்.*
தொலைபேசி இல.: 065-26257

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

(4975)

## திருமதி அருள்லட்சுமி அம்மா முருகுப்பிள்ளை

வியாபாரி மூலை, பருத்தித்துறையைச் சேர்ந்த காலஞ்சென்ற விநாயகர் அரிசி ஆலை உரிமையாளர் ஆ.சி.முருகுப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவி திருமதி அருள்லட்சுமி அம்மா அவர்கள் (16.06.2002) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் தகனக்கிரியைகள்(17.06.2002) திங்கட்கிழமை வியாபாரி மூலை மயானத்தில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

*வியாபாரி மூலை,*
*பருத்தித்துறை*

தகவல்:
மு.விக்கினேஸ்வரன் *(மகன்)*

## கருத்தரங்கு

சிறுவர் பாதுகாப்பு நிதியக் கருத தரங்கு எதிர்வரும் 28ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ்கல்வி வலயத் திற்கு முன்பாக அமைந்துள்ள யுனி செவ் நிறுவன மணடபத்தில் நடை பெறவுள்ளது. இக்கருத்தரங்கில் ஐந்து வலயங்களையும் சேர்ந்த முன்பள்ளி கல்விப் பணிப்பாளர்கள், ஆரம்பக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோரை தவறாது கலந்துகொள்ளுமாறு மேல திக மாகாணக் கல்விப் பணிப்பாளர் சி.சிவராசா கேட்டுள்ளார். (ஒ-ரி)

## யுவதியுடன் சேஷ்டை: இளைஞருக்கு விளக்க மறியல்!

தெற்கு நாரந்தனையில் வீதியால் நடந்துசென்ற யுவதியிடம் தகாத முறையில் நடந்ததாகக் கூறப்படும் இளைஞர் ஒருவரை ஊர்காவற்றுறைப பொலீஸார் கைதுசெய்து நீதி மன்றத் தில் ஆஜர்படுத்தினர். அந்த இளை ஞரை எதிர்வரும் 26 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு வழக்கை விசாரித்த நீதிவான் இ.த.விக்ன ராஜா உத்தர விட்டார். (ஒ)

## ஜனாதிபதி நாடு திரும்பினார்

கொழும்பு,ஜூன்19

ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க நேற்று முன்தினம் நாடு திரும் பினார். இத்தாலிக்கு விஜயம் செய்த அவர், ரோமில் நடைபெற்ற உலக உணவு மாநாட்டில் பங்குபற்றி உரையாற்றினார். (ஐ)

## தங்காலைச் சிறையில் 13 கைதிகள் உண்ணாவிரதம்

தங்காலைச் சிறைச்சாலையில் உள்ள 19 தமிழ்க் கைதிகள் கடந்த 15 ஆம் திகதி முதல் உண்ணா விரதம் இருந்து வருகிறார்கள். பல குற்றச்சாட்டுக்களின் பேரில் கைதாகி இருக்கும் இவர்கள் கடந்த ஐந்து, ஆறு மாதங்களாக எதுவித விசாரணையுமின்றி தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர்.

தங்களை விசாரணைக்குட்படுத் துமாறு கோரியே இவர்கள் உண்ணாவிரதம் இருந்து வருகின் றார்கள். (ஒ)

## தென்மராட்சி ஆங்கில ஆசிரியர்களுக்கு

யாழ்ப்பாணம்,ஜூன்19

தென்மராட்சி வலய கோட்ட மட்ட ஆங்கில தினப் போட்டிகள் நாளை சாவகச்சேரிக் கோட்டப் பாட சாலைகளுக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் பளை, கொடிகாமம் கோட்டப் பாடசாலைகளுக்கு கொடி காமம் திருநாவுக்கரசு மகா வித்தி யாலயத்திலும் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை நடைபெறவுள்ளன.

சம்பந்தப்பட்ட தென்மராட்சிக் கல்வி வலய சகல ஆங்கில ஆசிரி யர்களும் இன்று பிற்பகல்1 மணிக்கு வலயக் கல்வி அலுவலகத்திற்கு தவ றாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (ஒ)

## புலித்தடை நீக்கம்: மறுபரிசீலனை செய்ய ஜே.வி.பி. கோருகிறது

விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடையை நீக்கும் தீர்மா னத்தை மறுபரிசீலனை செய்யுமாறு மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) பிரதமர் ரணிலைக் கோருகிறது.

இது தொடர்பாக ஜே.வி.பி. பொதுச் செயலாளர் டில்வின் சில்வா கடிதம் ஒன்றை பிரதமருக்கு அனுப்பி யிருக்கிறார்.

புலிகள் இயக்கம் மீதான தடை நீக்கப்படுவதற்கு அவர் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார். (ஐ)


ஹாக்ரோஸ் The maharaja organisation limited Since 1939 HARCROS

### விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

யாழ்ப்பாணம் வன்னி
முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு

கமநல டிப்புளோமாவுடன் (Diploma in agriculture) கடினமாக
உழைக்கக் கூடிய திறமையும் ஊக்கமும் இருப்பின்
இதோ உங்களுக்கான ஓர் அரிய சந்தர்ப்பம் காத்திருக்கிறது.
மகாராஜா கூட்ட நிறுவனங்களின் ஓர் அங்கமான
ஹரிசன்ஸ் கெமிக்கல் பிறைவேட் லிமிட்டெட்
விற்பனைப் பிரதிநிதிகளை வேண்டி நிற்கிறது.
உங்கள் சுய விபரப் கோவையுடன் இவ் விளம்பரம்
கண்டு 14 நாட்களுக்குள் இருவரின் சிபாரிசுகளுடன்
(Non related refrees) விண்ணப்பிக்கவும்.

பணிப்பாளர் - பொது முகாமையாளர்
ஹரிசன்ஸ் கெமிக்கல் பிறைவேட் லிமிட்டெட்
இல 07 பிறேபுருக் பிளேஸ்
கொழும்பு 02

Director- General Manager
Harrisons Chemical (Pvt) ltd
No 07 Braybrock Place
Colombo 02

மகாராஜாவின் கூட்டு நிறுவனம் (Member of Maharaja Organisation)

### யாழ் விவசாயப் பெருமக்கள் அனைவரையும் பிறவுண்ஸ் அன்புடன் அழைக்கிறது

யாழ். திருநெல்வேலியில் 2002 ஜூன் 20ஆம் திகதி
மு.ப. 10.00 மணிக்கு மாவட்ட விவசாயப் பயிற்சி
நிலையம் திறந்து வைக்கப்படவுள்ளது.
யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த விவசாய சமூகத்தினர்
அனைவரையும் அச்சந்தர்ப்பத்தில் அங்கு
சமூகளிக்குமாறு பிறவுண் அன்ட் கொம்பனியின்
விவசாய பணிக்குழு யாழ். விவசாயத்திணைக்களத்துடன்
இணைந்து அன்புடன் வேண்டுகிறது.

பிறவுண் அன்ட் கொம்பனி லிமிடட்,
விவசாயப் பணிக்குழு,
இல. 75, தேவநம்பியதிஸ்ஸ மாவத்தை,
கொழும்பு - 10.
தொலைபேசி 693097 - 695238
674172 - 674332 (சேவைப் பகுதி)

விவசாய உதவிப் பணிப்பாளர்
விவசாயத் திணைக்களம்,
யாழ்ப்பாணம்
தொலைபேசி 021-2175

### விற்பனைக்கு உண்டு

CANON NP 1215 RECONDITION போட்டோ கொப்பியர்கள், Laminators, Faxes, Binders, Paper-cutters எல்லா இன போட்டோ கொப்பியர்கள், கொம்பியூட்டர் பிரின்டர்களுக்கான ரோனர்கள், உதிரிப்பாகங்கள் இப்பொழுது யாழ்ப்பாணத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு கொள்க:

**Peace Lanka (pvt) Ltd,**

26, Castle lane, Colombo - 4; 247 Galle Road, Colombo - 4
Tel:582320, 586479, 072-263778

(C-22496)


### "விழுதுகள் நிலத்தைத் தொடும்வேளை விழுந்து விட்டதே எங்கள் ஆலமரம்"

## 31ஆம் நாள் நினைவு வணக்கம்



புனித மரியாள் வீதி,
நாவாந்துறை வடக்கு,
யாழ்ப்பாணம். (4854)

### திருமதி சந்தியோ மரியம்மா
(பூவதி)

பிறப்பு 02.06.1948 சாவு 20-05-2002

எங்கள் வானத்து விடிவிளக்கே!
என்றும் எங்களின் குலவிளக்கே!
சந்தனத்துக் குளிர்ச்சியும்
செந்தமிழின் எழுச்சியும்
தந்தெமக்கு நிமிர்ச்சி தந்த தமிழ்த் தாயே!
பசித்த வயிறு எதுவாயினும்
பார்த்திருக்காத பாரியோ!
நெருப்பாற்றில் எமைத்தாங்கிப்
பயணித்த இலட்சிய ஓடமே!
எங்கள் வரலாற்றுப் பாலத்தை
கடந்துவிட்ட கால நதியில்லையம்மா - நீங்கள்
என்றும் எங்கள் ஒவ்வொருவரது
ஆன்மாக்களின் அடி ஆழத்தில்
இரண்டறக் கலந்துவிட்ட - எங்கள்
இதயக்கோயிலின் தெய்வம் அம்மா நீங்கள்!

*உங்கள் பிரிவால் துடிதுடிக்கும்:*
அன்புக் கணவா: ஜோ.ய.சந்தியோ
*(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர், யாழ். மின்சாரசபை)*
பிள்ளைகள்: .சந்தியோ மைக்கல் கொலின்ஸ் B.A.(Hons)
*(முன்னாள் விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்),*
சந்தியோ அலன்டீலன் (ஜோஜ்),
திருமதி செல்வா யூலியஸ் கொலினா (கயல்விழி)
*(முன்னாள் ஆசிரியை, சென். பற்றிக்ஸ் கல்லூரி),*
சந்தியோஅலன்டீனா (பூவிழி)
*(யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவி).*

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 27 - 01 - 1925 உதிர்வு 29 - 06 - 2001

### அமரர் கந்தையா மாசிலாமணி

நேசமுடன் பழகிப் பாசத்துடன் வாழ்ந்தீரே!
அன்பு முகமும் இனிய பேச்சும் நெஞ்சில் இருக்குதே!
திருநீறு துலங்கும் நெற்றி! கருணை பூத்த கண்கள்!!
ஓராண்டு கடந்தாலும் உங்களை மறக்க முடியுமா?
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*14, நாவலடி லேன்,*
*கேசாவில் பிள்ளையார் கோயிலடி,*
*வண்ணார்பண்ணை.* (4820)

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



உதயம் 03 - 11 - 1948 அஸ்தமனம் 20 - 05 - 2002

### திருமதி ஜாஸ்அமீன் குலமணி
(தையல் உரிமையாளர்)

*அன்பின் திருவுருவமாய் பாசத்தின் பிறப்பிடமாய் வாழ்ந்த*
*எங்கள் அன்பு அம்மாவே! சகோதரியே!*
*அன்பின் சிகரமாய்த் திகழ்ந்து பண்பாய் எம்மை வளர்த்து*
*இன்று எம்மைப் பாதியில் பரிதவிக்க விட்டனையோ?*
*ஆண்டுகள் பல சென்றாலும் மறப்போமா உம்மை?*

இன்று (19.06.2002) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் (சுன்னாகம்) நடைபெறும் ஆத்மசாந்தியிலும், வீட்டுக்கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*சு.கனகமணி,*
*முத்துக்கிருஷ்ணர் வீதி,*
*சுன்னாகம்.* (4928)

சகோதரர்கள்,
பிள்ளைகள்:
ஜா.சிபானா, ஜா.ஷாலினி.

## மரண அறிவித்தல்

### திருமதி தருமலிங்கம் சரஸ்வதியம்மா

மண்டைதீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும் நந்தாவில் ஒழுங்கை கொக்குவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தருமலிங்கம் சரஸ்வதியம்மா நேற்று (17.06.2002) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினம் தருமலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர்-சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் இரத்தினம்-அழகம்மா தம்பதிகளின் மருமகளும் நடேஸவரலிங்கம் (சுவிஸ்), காலஞ்சென்றவர்களான யோகேஸ்வரலிங்கம், இராசேஸ்வரலிங்கம், ஈஸ்வரலிங்கம் மற்றும் விக்னேஸ்வரலிங்கம், லோகேஸ்வரி (வாணி), பாலரத்தினம் ஆகியோரின் அன்புத் தாயாரும் இராஜமலர் (சுவிஸ்), மதிவதனி, மகேந்திரராசா (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும் தமிழினி, செந்தூரன், இராஜினி (சுவிஸ்), ஜயிந்தா (வேம்படி மகளிர் கல்லூரி, மாணவி), தனுஷிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.06.2002) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நந்தாவில் ஒழுங்கை,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.* (4957)

தகவல்:
த.விக்னேஸ்வரலிங்கம்
(பாலன் - மகன்)

**COOL LAMINATION - கவரிடுதல்**

உங்கள் பிரதான ஆவணங்கள், புத்தக அட்டைகளைப் பாதுகாக்க வேண்டுமா? குறைந்த செலவில் LAMINATING செய்துகொள்ள நாடுங்கள்:

**பிள்ளையார் அச்சகம்,**

(4970) 676, பருத்தித்துறை வீதி, நல்லூர்.



## ஒப்புநோக்குநர் (PROOF READER) தேவை

**தமிழ் ஒப்புநோக்குநர் (PROOF READER) தேவை.**

சொந்தக் கையெழுத்தில் 30.06.2002 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும். இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

விளம்பர இல.1541, மே/பா உதயன்,
யாழ்ப்பாணம். (C-22566)



## சுகாதாரப் பணியாளர்கள் தேவை

யாழ். போதனா வைத்தியசாலை சத்திரசிகிச்சைக் கூடத்தில் பணியாற்றுவதற்கு தற்காலிக சுகாதாரப் பணியாளர்கள் உடனடியாகத் தேவை.

யாழ்.போதனா வைத்தியசாலையிலிருந்து 5 மைல் சுற்றாடலிலுள்ள, க.பொ.த. உயர்தரம் படித்த, 18 வயதுக்கும் 35 வயதுக்கும் உட்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம்.

*விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:*

**செயலாளர்,**
யாழ்.போதனா வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம்,
யாழ்.போதனா வைத்தியசாலை.

விண்ணப்ப முடிவு திகதி:- 2002.07.03 (4982)



## இயந்திரங்கள் விற்பனைக்கு

1. மின்பிறப்பாக்கி (Generator)
   Type: STC 50
   50 KVA
   400/230V 50 Hz
   RMP 1500
   Leyland Engine
   Trailer Mounted
2. ஓஃவ் செற் இயந்திரங்கள்
   Type: KORD 64 GREY COLOUR LONG BOX
   உற்பத்தி ஆண்டு 1976.
   நல்ல நிலையில் உள்ளது.
3. பார்வையிடல் - கிழமை நாள்களில் பணிமனை நேரத்தில் மு.ப.8.30 மணி தொடக்கம் பி.ப.4.30 மணிவரை, சனிக்கிழமையில் மு.ப.8.30 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணிவரையும்.

**KALL KWICK PRINT LTD.**

*169, GRAND PASS ROAD,*
*COLOMBO - 14*

T.P. NO.: 449078 (C/22570)


## பிரதம தபாலகத்தில் 3 வர்ணங்களில் தபாற்பெட்டிகள்

வலி.மேற்கு,ஜூன்19

யாழ்.பிரதம தபாலகத்தில் கடிதங்களைச் சேர்ப்பதற்கு தனித தனிப் பெட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன.

யாழ்பிரதம தபாலகத்தில் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் விஜயத்தின்போது வர்ணத் தபால் பெட்டிகள் அமைக்கப்பட்டன.

பச்சை, சிவப்பு, நீலம் ஆகிய மூன்று நிறங்களைக் கொண்ட பெட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. பச்சைப் பெட்டியில் குடாநாட்டுக்கான தபால்களையும், சிவப்புப் பெட்டியில் வெளியூர்த் தபால்களையும் நீலப் பெட்டியில் வெளிநாட்டுத் தபால்களையும் சேர்ப்பிக்குமாறு பொது மக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

தபால்களை வகைப்படுத்தி அனுப்பும் பணியை விரைவுபடுத்தும் நடவடிக்கையாகவே இத்தகைய 3 வெவ்வேறு வர்ண தபால் பெட்டிகள் வைக்கும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

## வடமராட்சி மீனும் தேங்காயும் தென்மராட்சிக்கு

வடமராட்சி கிழக்குப் பகுதி கடலில் பிடிக்கப்படும் மீன்களும் பளைப் பிரதேசத்தில் பறிக்கப்படும் தேங்காய்களும் மீண்டும் சாவகச்சேரி - கொடிகாமம் சந்தைக்குவரத் தொடங்கியுள்ளதால் சந்தையில் மீன் மற்றும் தேங்காய் ஆகியவற்றின் விலைகள் வீழ்ச்சியடைந்துள்ளன.

வடமராட்சி கிழக்கு உடுத்துறையிலிருந்து சாவகச்சேரிக்குத் தனியார் வான்கள் வரத் தொடங்கியுள்ளதால் இப்பகுதியிலிருந்து பத்துக்கு மேற்பட்ட மீன் வியாபாரிகள் மீன்களை சந்தைக்கு எடுத்து வருகின்றனர்.

அத்துடன் மாசார், சோரன்பற்று, புதுக்காடு ஆகிய பகுதிகளிலிருந்து தேங்காய்களும் கொண்டுவரப்படுகின்றன. ஆழ்கடலில் மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதால் அடுத்த சில தினங்களில் மீன் வியாபாரிகளின் தொகை அதிகரிக்கலாமென நம்பப்படுகின்றது.

இப்பகுதிகளைச் சேர்ந்த பெருமளவு மக்கள் வன்னிப் பகுதியில் தங்கியிருந்ததால் அங்கிருந்து அனைதது் பொருள்களையும் வாகனங்களில் ஏற்றிவந்து வீடுகளை அமைதது வருவதாகவும் -

இப்பகுதியில் கடை வசதிகள் இல்லாததால் கிளிநொச்சி மற்றும் பளைப் பகுதியில் அத்தியாவசியப் பொருள்களை மக்கள் கொள்வனவு செய்து வருவதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)


# கேள்வி அறிவித்தல்
## பிரதம பொறியியலாளர் அலுவலகம்

01. கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்) பிரதம பொறியியலாளர் அலுவலகக் கேள்விச் சபையினரால், 2002ஆம் ஆண்டு ஆடி மாதம் 10ஆம் திகத' புதன்கிழமை முற்பகல் 10.00 மணிவரை யாழ்ப்பாணம் பிரதம பொறியியலாளர் (மாகாணம்) கட்டடங்கள் திணைக்களத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் எமது அலுவலகத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.
02. நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் இக்ராட் (ICTAD) கட்டடங்கள் நிர்மாணிப்பதற்கு கீழே குறிப்பிடப்படும் தரங்களையுடைய அல்லது அதற்கு மேல் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் மட்டும் கேள்விப் பத்திரங்கள் கோருவதற்குத் தகுதியுடையோராவர்.
03. ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினரால் வழங்கப்பட்டதும், இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தை யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்) நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.
04. தகுதியுடையோர் மட்டும் உரிய கேள்வி வைப்புப் பணத்தைச் செலுத்த அனுமதிக்கப்படுவர். வைப்புப் பணத்தை யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்) பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் செலுத்தி, பற்றுச் சீட்டைப் பெற்று, கேள்விப் பத்திரங்களை 2002ஆம் ஆண்டு ஆடி மாதம் 03ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிவரை யாழ்ப்பாணம, கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்) நிறைவேற்றப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

| வேலை விவரம் | பதிவுசெய்யும் தரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணம் |
|---|---|---|---|
| 01. *நீர்வழங்கலும், வடிகாலமைப்பும் திருத்தம் மத்திய மருந்தகம், மகப்பேற்றுமனை, கோண்டாவில்.* | எம்–9 | ரூபா 2,000/- | ரூபா 250/- |
| 02. *வடிகாலமைப்பு சீர்திருத்த வேலை மத்திய மருந்தகம், மகப்பேற்றுமனை, வரணி.* | எம்–9 | ரூபா 2,000/- | ரூபா 250/- |

05. கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஒரு வேலைக்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டுமே விநியோகிக்கப்படும்.
06. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம். மேலதிக விவரங்களை யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்), நிறைவேற்றுப் பொறியியலாளரிடமிருந்து வேலை நாள்களில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

பிரதம பொறியியலாளர் அலுவலகம்,
கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்),
கடற்கரை வீதி, யாழ்ப்பாணம். (சி-22572)

**பிரதம பொறியியலாளர்,**
*யாழ்ப்பாணம்.*



# VACANCIES
## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from suitably qualified persons for the under mentioned posts.

### FACULTY OF AGRICULTURE

1. Professor in Agronomy/Agricultural Economics/Agricultural Biology/Agricultural Chemistry/Agricultural Engineering/Animal Science.
2. Assistant Lecturer (on Contract)/Demonstrator (on Contract) in Agronomy/Agricultural Biology/Agricultural Chemistry/Animal Science/Agricultural Economics/Agricultural Engineering.

### FACULTY OF ARTS

1. Professor in Tamil/Education/Linguistics/Economics/Fine Arts.
2. Senior Lecturer Grade I/Senior Lecturer Grade II/ Lecturer (Probationary) in Carnatic Music (Vocal/Veena/Mirudangam)/Geography*/Economics/Psycology/Tamil.
3. Assistant Lecturer (on Contract) in Anthropology/Arts and Design/Christian Civilization/Dance (Bharathanatyam)/Dance (Vocal)/Dance (Mirudangam)/ Drama and Theatre Arts/Economics/Fine Arts/Geography/Hindu Civilization/Hindu Philosophy/Philosophy/Music-Carnatic(Vocal/Veena/Violin/Mirudangam)/Political Science/Psychology/Sociology/Tamil/Home Economics/English Literature/Mass Media/Journalism.
4. Tutor (on Contract) in Geography/History/Archaeology.
5. Instructor (on Contract) in Art and Design/Dance/Music.
6. Instructor in English, Grade II.

** Preference will be given those who specialised in Geographical Information System or Planing.*

### FACULTY OF MANAGEMENT STUDIES & COMMERCE

1. Professor in Business Administration/Commerce.
2. Assistant Lecturer (on Contract) in Business Administration/Commerce.
3. Visiting Lecturer in Law (Civil, Industrial, Commercial)

### FACULTY OF MEDICINE

Demonstrator (on Contract) in Anatomy/Bio Chemistry/Physiology/Community Medicine/Pathology/Microbiology/Paracitology/Forensic Medicine/Medicine/Pharmacology/Psychiatry/Paediatrics/Obstetrics & Gynaecology/Surgery.

### FACULTY OF ENGINEERING

1. Professor in Engineering (Electronic/Information Technology)

### FACULTY OF SCIENCE

1. Professor in Statistics/Organic Chemistry/Physical Chemistry/Botany/Marine Biology/Physics/Zoology/Computer Science/Mathematics.
2. Senior Lecturer Grade I/Senior Lecturer GradeII/Lecturer (Probationary) in Botany/Chemistry (Physical and Inorganic)/Physics* (Electronics, Computational Physics, Nuclear Physics, Particle Physics, Geo-Physics)/Zoology/Computer Science/Mathematics and Statistics.

   **Applications from Graduates in Electronics Engineering or Computer Engineering could also be entertained for the Post of Lecturer (Prob) in Physics.*
3. Assistant Lecturer (on Contract)/Demonstrator (on Contract)/in Botany/Chemistry/Physics/Zoology.
4. Assistant Lecturer (on Contract) Instructor (on Contract) in Computer Science/Mathematics and Statistics
5. Instructor (on Contract) in Computer Unit.
6. Assistant Net Work Manager
7. Instructor in Computer Technology Grade II

### PHYSICAL EDUCATION

Assistant Lecturer (on Contract)

| POST | SALARY SCALE |
|---|---|
| Professor | Rs.25,500 - 8x550 - 29,900/-p.m. |
| Senior Lecturer Grade I | Rs.21,500 - 8x475 - 25,300/-p.m. |
| Senior Lec er Grade II | Rs.18,325 - 5x475 - 20,700/-p.m. |
| Lecturer (Probationary) | Rs.11,820 - 10x375 - 15,570/-p.m. |
| Assistant Lecturer (on Contract) | Rs.10,800/-p.m. Fixed. |
| Tutor (on Contract) | Rs.9,000/- p.m. Fixed |
| Instructor/Demonstrator (on Contract) | Rs.9,000/-p.m.Fixed |
| Assistant Net Work Manager/ Instructor in Computer Technology | Rs.10,800 - 3x300 - 11,700 (EB) 12,900 - 13x375 - 17,775/-p.m. |
| Instructor in English Grade II | Rs.9.825 - 10x200 - 11,825/- |
| Visiting Lecturer | Rs.300per Hour. |

Application forms and other details may be obtained from the office of the Assistant Registrar/Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by sending a money order for Rs.20/- per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money order/Postal order drawn in favour of the "Bursar, University of Jaffna" together with a self - addressed stamped envelop 23x30 cm. in size.

Appointment on contract basis would also be considered for the posts of Professor and Senior Lecturer.

The closing dates of applications are
- i. Professor - 07.10.2002
- ii. Senior Lecturer Gr.I, Gr.II: Faculty of Science - 07.10.2002
- iii. Senior Lecturer Gr.I, Gr.II: other Faculties - 26.07.2002
- iv. All other posts - 26.07.2002

Applicants from the University System/Government Departments/Corporations and Statutory Boards should channel their applications through the Head of respective Institutions.

Applications received after the closing date will be rejected without intimation.

18.06.2002 (C/22569)

**Registrar,**
**University of Jaffna, Sri Lanka.**

## தண்ணீர் துப்பாக்கி




நாட்டில் தமக்கு எதிராக நடக்கும் பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள் நடக்கும்போது அவற்றை விரும்பாத அரசுகள் தமது அடக்குமுறை இயந்திரமான பொலீஸைவிட்டு அவற்றை அடக்க முயற்சிப்பது சாதாரணமான விடயம். இதற்கென குண்டாந்தடியடி, கண்ணீர்ப்புகைக் குண்டுவீச்சு, தண்ணீரைப் பீச்சியடிப்பது என்று பல வழிவகைகளைக் கையாள்கின்றன. இதில் இலகுவானதும் அதிகம் செலவில்லாததும் பவுஸர்களில் உள்ள தண்ணீரை ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பீய்ச்சியடிப்பதுதான்.

ஆனால் இந்த பவுஸர்களை அவசரத்துக்கு அங்கும் இங்கும் கொண்டு செல்வது மிகச் சிரமமான காரியம். சில சமயங்களில் இந்த பவுஸர்கள் குறிப்பிட்ட இடத்தைச் சென்றடைவதற்கு முன்னமேயே அங்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் எல்லாவற்றையும் துவம்சம் செய்து வைத்திருப்பார்கள். இதனை எல்லாம் பார்த்த ஜப்பானிய விஞ்ஞானிகள் பொலிஸார் மீது பரிதாபப்பட்டு அவர்களுக்கென ஒரு புதிய கருவியை வடிவமைத்துக் கொடுத்துள்ளார்கள். இது தோளில் சுமந்து சென்று ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தண்ணீரை பீய்ச்சி அடிக்கக் கூடியது. துப்பாக்கி போன்ற அமைப்பில் செய்யப்பட்டுள்ளது. (தண்ணீர் துப்பாக்கி) இந்த துப்பாக்கி குண்டுகளுக்குப் பதிலாக தண்ணீரை ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது மிகவேகமாகப் பீய்ச்சி அடிக்கும்.

ஜப்பானில் நடைபெறும் உலகக் கிண்ண உதைபந்தாட்டப்போட்டிகளில் கடமையாற்றும் பொலீஸாரிடம் இந்தத் துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளன. ரசிகர்கள் கலவரத்தில் ஈடுபட்டால் அதோ கதிதான்.

## வலையில் ஒரு சிலை



எதையாவது வித்தியாசமாகச் செய்து புகழ்பெறவேண்டும் என்பது எல்லோர் மனதிலும் உள்ள அவா. சிலருக்கு அது சாத்தியமாகின்றது. வேறு சிலருக்கு சாத்தியமாவதில்லை.

இங்கே ஒரு பூங்காவில் உள்ளே ஒன்றும் இல்லாமல் வித்தியாசமான தோற்றத்தில் உள்ள பெண்போன்ற உருவம் என்னவென்று உங்களுக்கு ஏதாவது புரிகிறதா?

இது 'வலைச் சிலை'. என்ன புரியவில்லையா? மீன்பிடி வலைகளால் செய்யப்பட்ட நவீன பாணி பெண்ணின் சிலை இது.

அண்மையில் ரஷ்யாவில் 'சோவியத் யூனியன் காலம் மற்றும் அதற்குப் பின்னைய காலத்தில் காலையின் நிலை' என்ற தலைப்பிலான கண்காட்சி ஒன்று நடந்தது. சென் பீட்டர்ஸ்பேர்க் நகரில் நடந்த இந்தக் கண்காட்சியில் தான் இந்த வித்தியாசமான வலைச் சிலை வைக்கப் பட்டிருந்தது. கண்காட்சிக்கு வந்திருந்த அனைவரது கவனத்தையும் இது கவர்ந்தது.

நல்லவேளையாக ரஷ்யர்கள் சில மாதங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் வராமல் போய்விட்டார்கள். வந்திருந்தால் இங்கே வீட்டுக்கு வீடு சும்மா கிடந்த வலைகளைப் பார்த்து விட்டு குடாநாடு முழுவதும் இப்படி வலைப் பெண்களை நட்டுவிட்டுப் போயிருப்பார்கள்.

# அடா! அப்பாடியா!!


## சேர்ட் பொக்கற்றில் ஓர் ஆயுதம்

இதுவும் உலகக் கிண்ண உதைபந்தாட்டப்போட்டியுடன் தொடர்புபட்ட ஒரு விடயம்தான். உதைபந்தாட்டப் போட்டிகள் எவ்வளவு உயிரோட்டமான விளையாட்டோ, அதேயளவுக்கு அதன் ரசிகர்களின் முரட்டுத்தனமும் பேர் போனது. சின்ன உதாரணம்: ரஷ்ய அணி தோற்று உலகக் கிண்ண போட்டியிலிருந்து வெளியேறியதை சகித்துக்கொள்ளமுடியாத அந்நாட்டு ரசிகர்கள் தலைநகர் மொஸ்கோவில் வன்முறையில் ஈடுபட்டு 40க்கும் மேற்பட்ட வாகனங்களை தீயிட்டு எரித்தனர். இந்த வன்முறைகளில் சிக்கி ஒருவர் உயிரிழந்தார். பலர் மிக மோசமான படுகாயங்களுக்கு உள்ளாகினார்கள்.



இவ்வாறான முரட்டு ரசிகர்கள் பலர் தற்போது தென்கொரியாவிலும் ஜப்பானிலும் குவிந்துள்ளனர். இதனால் இரு நாட்டு அரசுகளுக்கும் வயிற்றில் புளிகரைத்தது போன்ற நிலை. இவர்கள் தங்கள் நாட்டிலும் எதையாவது அடித்து நொறுக்கி விடுவார்களோ என்று. இதற்கான முன்னேற்பாடு களில் இரு நாடுகளும் அதிக கவனம் செலுத்தின. இதற்காக பேனா போன்ற ஓர் ஆயுதத்துடன் ஜப்பான் பொலீஸார் தயாராக இருக்கின்றனர்.

நீங்கள் படத்தில் பார்ப்பதும் அத்தகைய ஒரு நவீன ஆயுதம்தான். சிறிய பேனா போன்று தோற்றமளிக்கும் இது உண்மையில் பேனா அல்ல. அது கண்ணீர் புகையை வெளியிடும் ஓர் ஆயுதம். இதில் உள்ள ஒரு பொத்தானை அழுத்தி விட்டு கூட்டத்தின் மீது வீசினால் போதும் அதில் இருந்து வெளியாகும் மஞ்சள் நிறமான புகை வன்முறையில் ஈடுபடுபவர்களை மயங்கச் செய்துவிடும். பின்னர் அவர்களை 'லபக்' செய்துவிடுவது ஒன்றும் பெரிய காரியம் அல்ல. இத்தகைய 18ஆயிரம் பேனா ஆயுதங்கள் தற்போது ஜப்பான் பொலீஸாரிடம் இருக்கின்றன.




'உப்பில்லாப் பண்டம் குப்பையிலே' என்பது பழமொழி. இனிமேல் 'உப்பில்லா ராக்கெட் குப்பையிலே' என்பது புதுமொழி. ஆமாம் இனிமேல் ராக்கெட் எரிபொருளாக உப்பைப் பயன்படுத்தப் போகின்றார்கள். தற்போது ராக்கெட்டுக்களில் எரிபொருளாக திரவ மற்றும் திட எரிபொருள்களையே பயன்படுத்துகின்றனர். இவற்றைத் தயாரிக்க மிகுந்த பொருள்செலவு ஏற்படுகின்றது. அத்துடன் இவற்றைக் கையாள்வதும் மிகவும் கடினமானதும் ஆபத்தானதும் கூட.

எனவே விண்கலங்களில் பயன்படுத்தப்படும் எரிபொருள் தொடர்பாக விஞ்ஞானிகள் நடத்திய ஆய்வில் உப்பை ராக்கெட் எரிபொருளாகப் பயன்படுத்தலாம் என்று தெரியவந்துள்ளது. நைதரசன் உப்பில் சில இரசாயன மாற்றங்களைச் செய்வதன் மூலம் புதிய திட உப்பு ஒன்றை விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். அதனைப் பயன்படுத்தி சிறிய ராக்கெட்டுக்களை ஏவும் முயற்சியிலும் விஞ்ஞானிகள் வெற்றி பெற்றுள்ளனர்.

உணவில் நாம் பயன்படுத்தும் உப்பில் (சோடியம் குளோரைட்) சோடியம் மற்றும் குளோரின் அணுக்கள் எந்த அளவில், எந்த வகையில (நேர் - எதிர் விசை) உள்ளதோ அது போல நைதரசன் உப்பில் ஒரு பகுதியை நேர்விசை (Positive) ஆகவும் மறு பகுதியை எதிர்விசை (Negative) ஆகவும் மாற்றிப் புதிய வடிவம் கொடுத்தனர். சம அளவில் நேர்- எதிர் விசை கொண்ட இந்த நைதரசன் உப்பை திட எரிபொருளாகப் பயன்படுத்த முடியும் என்பது இந்த ஆராய்ச்சியின் முடிவு. பரிசோதனை அளவில் இந்த உப்பு எரிபொருள் ஆராய்ச்சி முழுமையாக வெற்றி பெற்றால் அது ராக்கெட் ஏவும் தொழில்நுட்பத்தில் பெரும் புரட்சி என்கிறார்கள்.

★ ★ ★ ★

தயாரிப்பு: கனிமொழி


# நோய் தீர்க்க வரும் 'மைக்ரோ சிப்'

புதிய கண்டுபிடிப்புகளும், நவீன தொழில்நுட்பங்களும் மருத்துவத் துறையில் பெரிதும் பயன்படுத்தப் பட்டு வருகின்றன.

மருத்துவத்துறையில் - குறிப்பாக இருதய நோய், நீரிழிவு நோய், புற்றுநோய் போன்ற நோய்களால் தாக்கப்பட்டு, தினமும் மருந்துகளைச் சாப்பிடுபவர்களுக்கு உதவ வந்துள்ள புதிய கண்டுபிடிப்புதான் 'மைக்ரோ சிப்'

கணனிகளின் இயக்கத்திற்கு உதவும் பொருளுக்கு 'மைக்ரோ சிப்' என்று பெயர். இது அளவில் சிறியதாக இருக்கும். அதே நேரத்தில் வியத்தகு வேகத்தில் கணனி கட்டளைகளை நிறேவேற்றும். அது போல மருந்துவத்துறையில் பயன்படுத்தப்படும் 'மைக்ரோ சிப்'பும் மருத்துவ குணம் நிறைந்தாக உருவாக்கப்பட்டுள்ளது.

நீரிழிவு நோய் போன்று ஒரு சில நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் தினமும் மூன்று வேளையும் மருந்துகளைச் சாப்பிடவேண்டும்; சிலர் தினமும் இருமுறை ஊசிமூலம் மருந்து செலுத்தும் நிலையிலும் இருப்பார்கள். இது சலிப்பான, வேதனை தரும் சூழ்நிலையை உருவாக்கும். மேலும் சிலர் மருந்து சாப்பிட மறந்துபோய் மாட்டிக் கொள்வதும் உண்டு.



'மைக்ரோ சிப்'பின் மாதிரி (பெரிய) நிஜமான வடிவத்தை இங்குள்ள படத்தின் மூலம் காணலாம். மருந்து நிரப்பட்டட மைக்ரோ சிப் அரை அங்குல அளவே இருப்பதை இந்தப் படத்தின் மூலம் தெரிந்து கொள்ளலாம்.



'மைக்ரோ சிப்'பில் மருந்து நிரப்பும் பணி கம்பியூட்டர் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

இது போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண உதவுவதுதான் 'மைக்ரோ சிப்'.

அமெரிக்காவில் உள்ள மாசாசூசெட்ஸ் பகுதியில் இருக்கும் மைக்ரோ சிப்ஸ் என்ற நிறுவனம் நவீன ரக 'மைக்ரோ சிப்' ஒன்றை உருவாக்கியுள்ளது. இது அளவில் மிகச் சிறியது. இந்த 'சிப்'பில் நாம் விரும்பும் மருத்துவப் பொருளை அடைத்து வைக்கமுடியம்.

மருந்து அடைக்கப்பட்ட 'மைக்ரோ சிப்'பை நோயாளியின் உடலில் எங்கு வேண்டுமானாலும் ஒப்பரேஷன் செய்து பொருத்திக்கொள்ளலாம். இந்த கணனி சிப்பில் பதிவு செய்துள்ள கட்டளைக்கு ஏற்ப குறிப்பிட்ட கால இடைவெளியில் மருந்து வெளியேறி உடலில் ரத்தத்தில் கலந்துவிடும்.

உதாரணமாக நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு அதற்குரிய மருந்து நிறைந்த 'மைக்ரோ சிப்'பை உடலில் பொருத்திவிட்டால் போதும். நாம எந்த நேரத்தில் மருந்து வெளியேற வேண்டும் என கட்டளை பதிவுசெய்துள்ளோமோ அந்த நேர இடைவெளியில் மைக்ரோ சிப்பில் இருந்து மருந்து வெளியேறி நோயாளியின் உடலில் கலந்துவிடும்.

மருந்து தீர்ந்த பிறகோ அல்லது நோய் குணமான பிறகோ மைக்ரோ சிப்பை உடலில் இருந்து அகற்றிவிடலாம். இந்த மருத்துவ முறையை ஜான் டி.சான்டினி என்பவர் கண்டுபிடித்தார்.

இவரும் இவரது குழுவினரும் சேர்ந்து கடந்த 3 ஆண்டுகளாக இது தொடர்பாக ஆய்வுகள் நடத்தினார்கள்.



ஆய்வுகூடத்தில் 'மைக்ரா சிப்'பில் மருந்து நிரப்பும் பணியை இரு விஞ்ஞானிகள் பார்வையிடுகின்றனர்.

பரிசோதனைக் கூடத்தில் எலிகளிடம் நடத்திய ஆய்வுகள் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து அடுத்த மனிதர்களிடம் இந்த மருந்து கலந்த 'மைக்ரோ சிப்'புகளை பொருத்தி ஆய்வு நடத்தி வருகின்றனர்.

இன்னும் 5 ஆண்டுகளில் இந்த கண்டுபிடிப்பு நவீன வடிவத்துடன் பொதுமக்கள் பயன்படுத்தும் அளவுக்கு வளர்ந்து விடும் என்று விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

இனி வருங்காலத்தில் டாக்டர்களின் சிகிச்சை வேலைப்பளுவை வெகுவாகக் குறைக்க இத்தகைய 'சிப்' புகள் உதவியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

'சிப்' பொருத்துங்க மருந்து சாப்பிடுவதை மறந்துடுங்க. என்று நோயாளிகள் இனி ஆனந்தமாக பாடலாம்.



'மைக்ரோ சிப்'புடன் அதனை உருவாக்கிய விஞ்ஞானி ஜான் டி.சான்டினி

# வாழ்த்தி வரவேற்கின்றோம்






மக்கள் வங்கித் தலைவர்

## திரு. லால் நாணயக்கார

அவர்களால் இன்று (2002.06.19) புதன்கிழமை
காலை 9.30 மணிக்கு நெல்லியடி பிரதேச மக்களின்
மனமறிந்த சேவைக்காக மீண்டும்
நெல்லியடி மக்கள் வங்கி ஆரம்பித்து அர்ப்பணிப்பதை நாங்கள்
வாழ்த்தி வரவேற்கின்றோம்.

இதற்கு உறுதுணையாகவிருந்த
உதவிப் பொதுமுகாமையாளர் **திரு. எஸ்.இளம்பிறைநாதன்**
பிரதேச முகாமையாளர் **திரு. எம்.கே.சிவபாதவிருதயர்**
நெல்லியடி கிளை முகாமையாளர் **திரு. ஏ.சிவகுமார்**
ஆகியோரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

## வாழ்த்துவோர்:

கட்டைவேலி/நெல்லியடி ப.நோ.கூ. சங்கம்
மொடேர்ண் ஸ்ரோர்ஸ்
கலைவாணி கண்ணாடிக் களஞ்சியம்
சிறி ஜெயா ரேடர்ஸ்
சிவம் ரெக்ஸ்ரைல்
சோலை வீடியோ விஷன்
ஜனனி பல்பொருள் வாணிபம்
மெற்றோ வைன் ஸ்ரோர்ஸ்
கிருஷ்ணாந்தம் பலசரக்குக் கடை
மாயவன் பலசரக்கு வாணிபம்
செல்லமுத்தூஸ் புடைவை மாளிகை
நெல்லை குமரன் ரேடர்ஸ்
சிதம்பரபிள்ளை புத்தக சாலை
குகரதி சில்க்/ராதா சில்க்

செல்லப்பிள்ளையார் பல்பொருள் வாணிபம்
கணேசா ஹாட்வெயர்
ஹப்பி ரெக்ஸ்ரைல்ஸ்
ஹரன் தேநீர் சாலை
அபிராமி ஸ்ரோர்ஸ்
ஜமுனா ஸ்ரோர்ஸ்
ஜீவா பல்பொருள் வாணிபம்
அருள் நாயகி கிறீம் ஹவுஸ்/அருள் நாயகி புத்தக சாலை
ஜெயா மோட்டர்ஸ்
தங்கம்ஸ்
விநாயகர் களஞ்சியம்
லவ்லி கூல்பார்/லவ்லி ஒலிப்பதிவு கூடம்/
லவ்லி புக் சென்ரர்

(4973)

**JAFFNA MEDICAL ASSOCIATION**
**EXTRA - ORDINARY GENERAL MEETING**

An urgent extra - ordinary general meeting of the JMA is to be held today (19th June,2002) at 12.00noon, at the clinical lecture hall, Teaching Hospital , Jaffna, on the request of several members of the Association.

Since important matters are to be discussed, All members are kindly requested to be present.

**Dr.M.S.Mugunthan**
Hony. Secretary.

(C/22577)

## 23.06.2002 கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

### தென்மராட்சி மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

மேற்படி சங்கத்தின் பதினொரு கிளைகளுக்குமான கிளைக்குழு உறுப்பினர் தெரிவு, விளம்பரங்களில் கூறியவாறு 23.06.2002 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். கிளை 1இல் இருந்து 11 கிளைகளுக்குமான கிளை பொதுச் சபைக் கூட்ட அறிவித்தல் இதுவரை கிடைக்கப் பெறாதவர்கள் கைதடிச் சந்தியிலுள்ள தற்காலிக காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். பெற்றுக் கொள்ளாவிடினும் இந்த அறிவித்தலை கிளைப் பொதுச்சபைக் கூட்ட அறிவித்தலாக ஏற்று, கிளை பொதுச்சபைக் கூட்டத்தில் பங்குபற்றும்படி மீண்டும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

தங்கள் கூட்டுறவுச் சேவையிலுள்ள
தலைவர்.

(C-22574)

### யாழ்ப்பாணம் - மாநகரசபை

### பாசையூர்ச் சந்தையை குத்தகைக்கு வழங்குவதற்கான

## கேள்வி அறிவித்தல் - 2002

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குச் சொந்தமான பாசையூர்ச் சந்தையை 01.07.2002ஆந் திகதிமுதல் 31.12.2002ஆந் திகதிவரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் படிவக் கட்டணம் ரூபா 281.25வும், கேள்விப் பிணைப் பணம் ரூபா 1000/-வும் செலுத்துவதன் பேரில் எதிர்வரும் 26.06.2002 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

அதே தினம் பி.ப 2.30 மணிக்கு முன் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அன்றைய தினம் பி.ப. 3மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.

மேலதிக விவரங்களை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

| *விவரம்* | *ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை* |
|---|---|
| பாஷையூர்ச் சந்தை | ரூபா.11,000.00 |

*மாநகர அலுவலகம்,*
*யாழ்ப்பாணம்.*
*13.06.2002.* (C/22578)

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,யாழ்ப்பாணம்.

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 24 . 01 . 1927

விண்ணில் 03 . 06 . 1998

### அமரர் கதிரித்தம்பி கந்தசாமி

**(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், மரக் கூட்டுத்தாபனம்)**

**திதி:- 19.06.2002 (வளர்பிறை நவமி)**

என்றும் எங்கள் இதயங்களில் வீற்றிருந்து
எமக்கு நல்வழி காட்டும் எங்கள் அன்புத்
தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய
வைரவப் பெருமானை வேண்டி நிற்கும்....

*மீசாலை மேற்கு,*
*மீசாலை.* (4985)

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள் பேரப்பிள்ளைகள்.

## சமய சந்நிதிகளில

யாழ்ப்பாணம்,ஜூன்19

நயினை நாகபூஷணி அம்பாள் ஆலய மஞ்சத் திருவிழா இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது.

இன்று மூலமூர்த்திக்கும் எழுந்தருளி அம்பாளுக்கும் சங்காபிஷேகம் நடைபெறும். இரவு சித்திர மஞ்சத்தில் வீதியுலா இடம்பெறும்.

(ம-13)

★ ★ ★

சண்டிலிப்பாய்,ஜூன்19

மாதகல் காஞ்[illegible] ஸ்ரீ நரசிங்க வைரவர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் இன்று புதன் கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது. உற்சவ தினங்களில் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய ஆசிரியர் ஆ.கனகரத்தினத்தின் சமயச் சொற்பொழிவு இடம்பெறும்.(ம-135)


லஷ்சுமி இணுவில்.
LEONARD DIC APRIO
KATE WINSLET
டைட்டானிக் (தமிழாக்கம்) (ரீலஸ்) (4986)

ராஜா யாழ்ப்பாணம்.
குணால், மோனல்
மற்றும் பலர் நடித்த
பேசாத கண்ணும் பேசுமே...
காட்சிகள்: தினசரி - 10.30, 2.30, 5.30
சனி, ஞாயிறு - 10.30, 2.30, 5.30
(C/22538)

நாகம்ஸ் சுன்னாகம்
அருண்குமார், சுமிதா,
ரஞ்சித், மனோரமா நடித்த
பாண்டவர் பூமி (ரீலஸ்)
காட்சிகள்: 11.00,3.00 (புதிய நேரம்)
இனிய பாடல்கள் நிறைந்தது.
(4984)

நிறைஞ்சனாஸ் சங்கானை
ஸ்ரீகாந்த், பூமிகா, ரகுவரன், விவேக் நடித்த
ரோஜாக்கூட்டம் (ரீலஸ்)
தினசரி: 11.00, 2.30, 5.30 (பு.நே.) (C-22539)


## மரண அறிவித்தல்

### பாலச்சந்திரன் சடாட்சரம்

*(ஓய்வுபெற்ற கட்டட பரிசோதகர், கல்வித் திணைக்களம்)*

நேற்று (18.06.2002) செவ்வாய்க் கிழமை பிரசுரமாகிய மரண அறிவித்தலில் மைத்துனரான தர்மலிங்கம் என்பவரது பெயர் விடுபட்டுள்ளது. இப்பெயரை சேர்த்து வாசிக்கவும்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (19.06.2002) மு.ப.11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கல்லூரி ஒழுங்கை,*
*கொக்குவில் கிழக்கு.*

தகவல்:
குடும்பத்தினர். (4991)

## தவறிவிட்டது

நேற்று (18.06.2002) செவ்வாய்க்கிழமை K.கண்ணன் என்பவரது கயிற்று முறுக்கு பவுண் சங்கிலி (1 பவுண்) ஒன்று யாழ்நகருக்கும் கே.கே.எஸ். வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் லிங்கம் ஸ்ரோர்ஸ், 603, K.K.S.றோட், நாச்சிமார் கோயிலடி எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (4989)

## இலங்கை நூலக சங்கப் பரீட்சை

மேற்படி பரீட்சை சம்பந்தமாக கொழும்பிலிருந்து வருகை தந்திருக்கும் இணைப்பாளர் திரு. K.மாணிக்கவாசகருடனான கலந்துரையாடல் நாளை (20.06.2002) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு யாழ்.வைத்தீஸ்வரா கல்லூரியில் நடைபெறும்.

பரீட்சைக்கு விண்ணப்பித்த அனைவரையும் சமுகம் தரும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

செயற்றிட்ட இயக்குநர்,
யாழ்.றோட்டறிக் கழகம்.

(C-22581)

## கண்ணீர் அஞ்சலி



மலர்வு 23 - 03 - 1914

உதிர்வு 17 - 06 - 2002

### அமரர் அருளம்பலம் தர்மலிங்கம்

ஆத்மா சாந்தி அடைய அனைவரும் பிரார்த்திக்கின்றோம.

*கொழும்பு-4* (C/22573) - குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### அருளம்பலம் தர்மலிங்கம்

உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு பம்பலப்பிட்டியில் வசித்தவரும் தெல்லிப்பழை ஸ்ரீமுருகன் மில்ஸ் முன்னாள் உரிமையாளருமாகிய அருளம்பலம் தர்மலிங்கம் (சின்னராசா) அவர்கள் 17.06.2002 திங்கட்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற அருளம்பலம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற குமாரவரோதயர் - சின்னம்மா தம்பதிகளின் மருமகனும், சிவசோதிப்பிள்ளையின் அன்புக் கணவரும் இரங்கநாதன் (Australia), பார்வதி, யமுனா (Australia), றூபா (U.K.), பவானி (Thomos Cook Ltd, Colombo) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் குமாரவேல் (ex. Hotel Tapropane Grandmet (Ceylon) Ltd.), சிறீஸ்கந்தராஜா (ex. Irrigation Dept.) (Australia), கமலாதேவி (Aus tralia) ஆகியோரின் அன்பு மாமனாரும், மிருதுபாஷினி, லக்ஷினி ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை, தம்பிஐயா, முத்தம்மா ஆகியோரின் சகோதரரும் சிவதாசபிள்ளை, சிவகடாட்சம்பிள்ளை, சிவபூரணம்பிள்ளை, காலஞ்சென்றவர்களான சிவபாலசுந்தரம்பிள்ளை, சிவசிங்காரியபிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனரும். ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (19.06.2002) புதன்கிழமை பொறளை A.F. றேமண்ட் மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கியைகளின் பின் மாலை 4.00 மணிக்கு கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.20/2,சிறபறி கார்டன்,*
*கொழும்பு-4. 074-516595* (C/22573)

தகவல்:
திருமதி தருமலிங்கம்

### திருமதி பொன்னையா சரஸ்வதி

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்புத்துறையைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னையா சரஸ்வதி அவர்கள் நேற்று (18.06.2002) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை பொன்னையா அவர்களின் அன்பு மனைவியும் கிருஷ்ணகுமார் (அரச ஒப்பந்தகாரர், வெங்கடேஸ்வரன் - நாவற்குழி), ஜெயகுமார் (கனடா), ஜெயந்தி ஆகியோரின் அன்புத் தாயாரும் கிருஷ்ணாம்பாள் (ஆசிரியை - லண்டன்), இரஞ்சிதமலா (கனடா), தேவகி (கொழும்பு) ஆகியோரின் சிறியதாயாரும் சண்முகநாதன் (பொறியியலாளர், லண்டன்), காலஞ்சென்ற Dr.யோகராசா, Dr.செல்வவிநாயகப்பிரகாசம் (கொழும்பு), செல்வராணி (நாவற்குழி), யமுனா (கனடா), மோகன் (ஆசிரியர், யாழ்.இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.06.2002) புதன்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் இல.54,புங்கங்குள வீதியின் (கணக்கர் சந்தி அருகில்) இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.54,புங்கங்குளம் வீதி,*
*கொழும்புத்துறை,*
*யாழ்ப்பாணம்.* (4987)

தகவல்:
பொ.கிருஸ்ணகுமார்
(மகன்)

### திருமதி A.R. விநாசித்தம்பி இராசம்மா

மலேசியாவை பிறப்பிடமாகவும் காரைநகர் நந்தாவில் களபூமியை வசிப்பிடமாகவும் தற்போது பிரப்பங்குளம் வீதி யாழ்ப்பாணத்தில் வசித்தவருமான விநாசித்தம்பி இராசம்மா நேற்று (18.06.2002) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற A.R.விநாசித்தம்பியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சங்கரலிங்கம்,இராசலிங்கம் (ஜேர்மனி), யோகலிங்கம் (யாழ்ப்பாணம்), விமலாதேவி(ஜேர்மனி), சொர்ணலிங்கம்(கொழும்பு), சிகாமணிதேவி, தியாகலிங்கம் (ஜேர்மனி),சறோஜினிதேவி (ஜேர்மனி), சந்திராதேவி (ஜேர்மனி) ஆகியோரது பாசமிகு தாயாரும் இராசமணி (ஜேர்மனி), சாரதாதேவி, கைலைநாதன்(ஜேர்மனி),தேவராசன் (சிறி முருகன் தொலைத் தொடர்பக உரிமையாளர்), ஜெயாமணிதேவி (ஜேர்மனி), ஸ்ரீரஞ்சினி (ஜேர்மனி), கேதீஸ்வரநாதன் (ஜேர்மனி), ஆறுமுகநாதன் (ஜேர்மனி) ஆகியோரது அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பிரப்பங்குளம் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (C/22580)

தகவல்:
V. யோகலிங்கம்
(மகன்)



## ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்

### திருமதி இராசகுமாரியம்மா சிவலிங்கம்

**(இராசாத்தி - அண்ணி)**

*(ஓய்வுபெற்ற நெசவு போதனாசிரியர்)*

திதி: ஆனி பூர்வ பக்க தசமி (19.06.2002)

ஆண்டுகள் ஐந்து ஓடி மறைந்தது அம்மா
உன் - நித்த முகம் கண்டு அறுபது மாதங்கள் அம்மா
வேதனை உள்ளங்கள் துயர் சுமந்து இருநூற்று நாற்பது வாரங்கள்
- அம்மா
ஓடி மறைந்தது ஆயிரத்து எண்ணூற்று இரண்டு நாள்கள்
- அம்மா

*உங்கள் ஆத்மா சாந்தியடைய அம்மன் பாதங்களில் தினமும்*
*மலர் தூவி வணங்கும் அன்பு உள்ளங்கள்*

*"ஜனனோதயம்"*
*செல்வராஜா அவனியூ*
*அம்மன் றோட்,*
*திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.*

செ.சிவலிங்கம் (கணவர்),
பிள்ளைகள்

தாய் மடியில் 20.11.1946
அம்மன் பாதங்களில் 14.07.1997

(C-22582)

# சமுர்த்தி நிவாரணவெட்டு மட்டக்களப்பில் நிறுத்தம்!

களுவாஞ்சிக்குடி,ஜூன்19

சமுர்த்தி நிவாரணக் கொடுப்பனவை 25 சத வீதத்தால் குறைக்கும் திட்டம் மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

சமுர்த்தி அமைச்சருடன் தான் தொடர்புகொண்டு இக்கொடுப்பனவைக் குறைக்கவேணடாம் என்று விடுத்த கோரிக்கையை அடுத்தே கொடுப்பனவக் குறைப்பு இடைநிறுத்தப்பட்டது என்று ஞா.கிருஷ்ணபிள்ளை எம்.பி. தெரிவித்தார். சமுர்த்தி கொடுப்பனவுகளை 25 சதவீதத்தால் குறைக்க அமைச்சு பணிப்புரை விடுத்திருப்பது தெரிந்ததே.

'மட்டக்களப்பு மாவட்டம் வன்செயல்களால் பாதிக்கப்பட்ட மாவட்டம். இம்மாவட்டத்தின் நிலையை நேரில் பார்வையிட்ட பின் கொடுப்பனவுக் குறைப்பு பற்றி தீர்மானியுங்கள்' என்று கிருஷ்ணபிள்ளை எம்.பி. கேட்டுக்கொண்டார். (ஐ)

# நிரந்தர நியமனம் வழங்கக் கோரி தொண்டர் ஆசிரியர் போராட்டம்

## வன்னியில் இன்று நடக்கும்

கிளிநொச்சி,ஜூன்19

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த பாடசாலைகளில் பணிபுரியும் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கவேண்டும் என்று கோரி இன்று வன்னியில் வகுப்புப் பகிஷ்கரிப்பு மற்றும் கண்டனப் பேரணி ஆகியன நடத்தப்படவிருக்கின்றன.

யுத்த காலத்தில் பாடசாலைகளில் போதிய ஆசிரியர்கள் இல்லாத நிலையில் தொண்டர் ஆசிரியர்கள் சேவை மனப்பான்மையுடன் சிறப்புறப் பணியாற்றி கல்விச் செயற்பாடுகளுக்கு உதவியுள்ளார்கள் என்றும் -

அவர்களுக்கு நிரந்த நியமனம் வழங்வேண்டும் என்றும் -

பொதுவாகக் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.

இன்றைய போராட்டத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள் கூட்டாக ஈடுபடவுள்ளனர். (ம-3)

INFORMATION TECHNOLOGY PARK
272, Stanley Road, Jaffna, Sri Lanka
T-P: 021-3641 e-mail: itp@sltnet.lk

Practical Workshop on PC Hardware & Maintenance
1st W. Shop - Mon ,Wed -11-1 pm
2nd W. Shop - Sat ,Sun -11-1 pm

Online Training on Web Page Designing
Mon,Wed, Fri - 5-7 pm

Online Training on Internet Practical Workshop
1st Batch:-Mon,Wed,Fri- 8to10am
2nd Batch:-Mon,Tue,Thu-11to1pm
3rd Batch:-Sat, Sun - 8to11am
4th Batch:-Sat, Sun - 11to 2 pm

Workshop Training on Typesetting & Designing
Sat, Sun: - 5 to 7 pm

Duration 1Month
Course fee 1000/=
Admissions are limited.
Course commence on:22-06-2002
Inquiries: Office

# வடக்கு - கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இனப்பிரச்சினை சம்பந்தமான அடிப்படை விடயங்கள் பற்றிப் பேசுவதற்கு விரும்பினார்.

தமிழ்மக்களும் தமிழ்க்கட்சிகளும் புலிகளும் எதிர்ப்புத் தெரிவித்ததை அடுத்தே இடைக்கால நிர்வாகம் பற்றி முதலில் பேசலாம் என்று பிரதமர் ஒப்புக்கொண்டார்.

இடைக்கால நிர்வாகத்தில் உளள பெரிய சிக்கல் இதுதான்; அதாவது அரசு விரும்புகிற மாதிரியான நிர்வாக அமைப்பை ஏற்று நடத்தப் புலிகள் தயாராக இல்லை.

அதேவேளை -

புலிகள் விரும்புகிற மாதிரியான இடைக்கால நிர்வாக அமைப்பை ஏற படுத்த அரசும் தயாராக இல்லை.

இடைக்கால நிர்வாகத்தில், மாகாண சபைகளைப்போல் அரசாங்கத்தின் மேலாண்மை இருக்கவேண்டும். அரசாங்கத்தின் பொலீஸ், இராணுவ அமைப்புகள் நாட்டின் ஏனைய பகுதிகளைப்போல் வடக்கு - கிழக்கிலும் தமது ஆணையை முழுமையாகச் செலுத்தக்கூடியனவாக இருக்கவேணடும்.

வேறுவிதமாகச் சொல்லுவதானால், ஒரு ஆளுநர் மாகாண நிர்வாகத்தை நடத்துவது போலவும், ஒரு ஆணையாளர் அரசாங்கப் பொறுப்பில் ஒரு மாநகரசபை நிர்வாகத்தை நடத்துவது போலவும் புலிகள், அரசாங்கத்துக்குக் கீழ்ப்படிந்து இடைக்கால நிர்வாகத்தை நடத்தவேண்டும். இதுதான் அரசின் விருப்பம் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

புலிகள் அதற்குச் சம்மதிப்பார்களா? போர்க்காலத்தில்கூட வடக்கு - கிழக்கில் அரசாங்கச் செயலகங்கள் மற்றும் அரசாங்க அலுவலகங்கள் எல்லாம் இயங்கிக்கொண்டிருக்க, புலிகள அங்கே கேட்பாரின்றி தமது ஆட்சியை நடத்தியவர்கள்.

அவர்களிடம் ஒரு பலமான இராணுவக்கட்டமைப்பு, பொலீஸ் கட்டமைப்பு, நீதிச்சேவைக் கட்டமைப்பு, பொருளாதாரக் கட்டமைப்பு என்று இப்படி எத்தனையோ கட்டமைப்புகள் இருந்தன. இப்போதும் அவர்களுடைய கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் அவை சீராக இயங்கிவருகின்றன.

எத்தனையோ போராளிகளைப் பலி கொடுத்து, எத்தனையோ அழிவுகளைச் சந்தித்த புலிகள், தங்களுடைய கட்டமைப்புகளையெல்லாம் விட்டுத்தளளி விட்டு அரசாங்க ஆணைக்கு உட்பட்ட இடைக்கால நிர்வாகத்தை ஏற்றுக் கொள்ள முன்வருவார்களா?

நாட்டுப் பிரிவினைக்கு எதிராக 6 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் கீழ் சத்தியப்பிரமாணம் செய்துகொள்ள விரும்புவார்களா?

இடைக்கால நிர்வாகம் பற்றி இரு தரப்பிலும் நோக்கங்களும் இலட்சியங்களும் நேர்விரோதமாக இருக்கும் போது எவ்வளவு விட்டுக்கொடுத்துப் பேசினாலும் இணக்கம் ஏற்படும் என்று எதிர்பார்க்க முடியுமா?

அதனால்தான் இடைக்கால நிர்வாகம் இலேசில் வரக்கூடிய ஒன்றல்ல என்று அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன. (ம)

## யாழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைக்கு விஜயம்செய்த சமயம் இந்த மணிக்கூண்டுக்கு கோபுரத்தில் பொருதுவதற்கான பெரியளவிலான மணிக்கூடுகளை அன்பளிப்புச் செய்திருந்தார்.

இதனை அடுத்து மணிக்கூண்டுக் கோபுரத்தைப் புனரமைக்கும் பணிகள் ஆரம்பமாகின. தற்போது அந்தப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன.

யாழ்நகர முதல்வர் செ.சுந்தையன் தலைமையில் இன்று நடைபெறும் நிகழ்வில் பிரிட்டிஷ் தூதுவர் கோபுரத்தைத் திறந்து வைப்பார். இந்த நிகழ்வில் புனர்வாழ்வு, மீள்குடியமர்வு அகதிகள் விவகார அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனாவும் கலந்து கொள்வார்.

இதேவேளை -

1996 ஆண்டு முதல் மூடப்பட்டுள்ள மணிக்கூண்டு வீதியும் இன்று முதல் மக்கள் பாவனைக்குத் திறந்துவிடப்படவுள்ளது. (ம-10-15-31-180)

## வலி.வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலி.வடக்கு புனர்வாழ்வுக் கழகம் ஆகியன கூட்டாக இந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்துள்ளன. (ம-3-10-15-86)

## கூட்டணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நியமிக்கவேண்டும் என்று ஆனந்த சங்கரி தலைமையிலான ஒருசாரார் குரல்கொடுக்கும் அதேநேரத்தில் -

தேசியப்பட்டியல் எம்பியாக துரைரட்ணசிங்கத்தை நியமிக்கவேண்டும் என்று விடுதலைப் புலிகள் விருப்பத்துடன் மற்றும் ஒருசாரார் வலியுறுத்தி வருகின்றனர்.

இத்தகைய பரபரப்பான நிலையில் செயற்குழு ஞாயிறன்று கூடவுள்ளது.

துரைரட்ணசிங்கம் தேசியப் பட்டியல் எம்.பியாக நியமனம் செய்வது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது என்று கூட்டணிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவர் வீ.ஆனந்தசங்கரியே தலைவராக நியமிக்கப்படும் வாய்ப்பு அதிகமாக உள்ளதாகவும் அவர் மேலும் சொன்னார். (ம-3)

## உடன்படிக்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளின் அரசியல் துறை நடுவப் பணியகத்தில் முற்பகல் 10.30 மணிக்கு பேச்சுக்கள் ஆரம்பமாகின. 12.30 மணிவரை அவை தொடர்ந்தன.

சமாதான நடவடிக்கைகளுக்கான செயலகத்தின் தலைவர் பேர்னாட் குணதிலக, செயலக அதிகாரிகளான எட்வேர்ட் ரூபசிங்க, அப்துல் அஸீஸ ஆகியோர் பேச்சில் பங்கேற்றனர்.

விடுதலைப் புலிகள் தரப்பில் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழேந்தி மற்றும் புலித்தேவன், ஜோர்ச், ஈழமாறன் ஆகியோர் பங்கேற்றனர்.

புரிந்துணர்வு உடன்பாட்டை சிரிவர நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அங்கு விரிவாக ஆராயப்பட்டது.

- ஏ-9 பாதை ஊடான மக்களின் நேரடிப் போக்குவரத்து. அதில் படையினர் பயணம் செய்ய அனுமதித்தல்.
- கடற்போக்குவரத்தைப் புலிகள் மேற்கொள்வதில் உள்ள தடைகள்.
- பொதுக்கட்டடங்கள், ஆலயங்கள், பாடசாலைகள் ஆகியவற்றில் இருந்து படையினர் வெளியேறிய பின்னர் அவற்றைப் புனரமைத்தல்.
- கண்டி வீதியை ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் புனரமைத்தல்.
- புரிந்துணர்வு உடன்படிக்கையில் உள்ள விடயங்களை மிக விரைவில் நடைமுறைப்படுத்தி விரைவாக பேச்சை ஆரம்பித்தல்.
- பேச்சுக்கு முன்னர் விடுதலைப புலிகள் மீதான தடையை நீக்குதல்.
- பேச்சுக்கான நிகழ்ச்சி நிரல் தயாரித்தல்.

- ஆகிய விடயங்கள் தொடர்பாக இரு தரப்பினரும் விரிவாக ஆராய்ந்தனர்.

புரிந்துணர்வு உடன்பாட்டைச் சரிவர நடைமுறைப்படுத்துவது தொடர்பான செயற்பாடுகளை கண்காணிக்க அரசு, புலிகள், ஏனைய தரப்புக்கள் அடங்கிய கூட்டுக்குழு ஒன்றை அமைக்கவும் அங்கு இணக்கம் காணபட்டது என்று சமாதான நடவடிக்கைகளுக்கான செயலகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதியும் இடம் பெறுவார்.

இக்குழு முதலில் படையினர் தங்கியுள்ள ஆலயங்களுக்குச் சென்று அங்குள்ள நிலைமைகளை ஆராயும.

பேச்சுக்கள் ஆரம்பமாக முன்னர் புலிகள் மீதான தடைநீக்கப்படும் என்று அரசுக் குழு புலிகளிடம் உறுதி அளித்தது.

இரு தரப்புக்களுக்கும் இடையில் நம்பிக்கையை கட்டி எழுப்புவது தொடர்பாகவும் இரு தரப்பினரும் நேற்று ஆராய்ந்துள்ளனர்.

அரசுக் குழுவின் தலைவர் பேர்னாட் குணதிலக நேற்றைய பேச்சுக் குறித்துக் கருத்து வெளியிடுகையில் கூறியதாவது:-

யுத்தநிறுத்த உடன்படிக்கையில் கைச்சாத்தான சில விடயங்களை அரசாங்கம் விரைவுபடுத்திச் செயற்படுத்துவதன் மூலம் சமாதானப் பேச்சுக்கள் விரைவாக இடம்பெறும்.

அத்துடன் சமாதான நடைமுறைகளில் விடுதலைப் புலிகளும் நம்பிக்கை கொண்டிருக்கின்றனர் - என்றார். (ம-3-12)

## கடற்படையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குத் தடையாக இருந்தார் என்பதை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஏற் றுக்கொண்டார்.

புலிகள் தீவுப் பகுதிக்குச் செல்வதற்கு கடற்படையினர் தடையாகவோ, இடையூறாகவோ இருக்கக்கூடாது என்று தான் ஏற்கனவே கடற்படையினருக்குப் பணித்திருந்ததாகவும் -

எனினும் இத்தகைய அசம்பாவிதங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் அவர் மேலும் சொன்னார்.

இது தொடர்பான விசாரணை அறிக்கை கிடைத்ததும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று பி.பி.ஸியின் சிங்களசேவையான சந்தேசியவுக்கு அளித்த பேட்டில் அவர் கூறினார். (ம-6-12)

## நெடுந்தீவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதையடுத்து இரு தரப்பினருக்கும் இடையில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றது.

அச்சமயம் அந்தப் பாதையூடாகச் செல்வதற்காக வந்த பொதுமக்கள், போராளிகள் செல்ல அனுமதி வழங்கினால்தான் தாமும் மேற்கொண்டு செலவோமென படையினரிடம் தெரிவித்தனர்.

இதனை அடுத்து நிலைமை கட்டு மீறுவதைத் தவிர்க்கும் வகையில் உடற்சோதனை ஏதும் இன்றி புலிகள் நெடுந்தீவுக்குச் செல்ல கடற்படையினர் அனுமதித்தனர்.

பின்னர் தமிழீழ தேசியக் கொடி, எழுச்சிக் கொடி ஆகியவற்றை தாங்கியவாறு 30 போராளிகள் நெடுந்தீவுக்குச் சென்றனர்.

நெடுந்தீவில் அவர்களுக்கு உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டது. அங்கு பொதுக்கூட்டம் ஒன்றையும் மக்கள் ஏற்பாடு செய்திருந்தனர். அதிலும் புலிகள் கலந்துகொண்டனர்.

இன்று காலை புலிகளின் குழு நயினாதீவுக்குச் செல்கின்றது.

இதேவேளை, நேற்றுக்காலை புங்குடுதீவுக்குச் சென்ற போராளிகளுக்கு மக்கள் உணர்வுபூர்வமாக வரவேற்பு வழங்கினர்.

புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் வரவேற்புக் கூட்டம் ஒன்று நயினாதீவு - புங்குடுதீவு ப.நோ.கூ.சங்கத் தலைவர் டாக்டர் இரத்தினம் தலைமையில் நடந்தது.

விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, தீவகப் பொறுப்பாளர் செம்மணன் ஆகியோர் ஈகச்சுடரேற்றினர்.

அங்கு நடந்த கூட்டத்தில் பலர் உரையாற்றினர். அதன்பின்னர் அங்கு போராளிகளுக்கு மக்கள் மதிய உணவு வழங்கி உபசரித்தனர்.

IIS AutoCAD
புதிய பிரிவு ஆரம்பம
நாள்: 22.06.2002
மேற்படி கணனிக் கற்கைநெறி காலை 10 மனிக்கு ஆரம்பமாகவுள்ளது. இது பொறியியல்துறை சார்ந்தவர்களுக்கும் – பொறியியல்பீட மாணவர்களுக்கும் என விசேடமாக ஆரம்பிக்கப்படுகிறது.
- இயக்குநர்,
IIS, யாழ்ப்பாணம்.
(C-22579)

IPAS
(The Institute of Professional Accounting Studies)
IPAS - the Gateway for becoming professional
Chartered Accountancy (S.Lanka) C.I.M.A (U.K)
C.M.A. (Sri Lanka) SLIM (Marketing)
aat
IPAS is directly co - ordinated with the above mentioned professional Bodies.
ஹலோ: பாடசாலை படிப்பினை முடித்துவிட்டு இருப்பவர்களே (O/L, A/L), தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களே (HNDA, HNDC, Dip in Commerce), காப்புறுதி, வங்கிகளில் பணிபுரிபவர்களே, பல்துறை சார் பட்டதாரி மாணவர்களே, பட்டதாரிகளே!
நீங்களும் ஒரு தொழில்சார் நிபுணராக வர நாம் உங்களைத் தயார்ப் படுத்துகின்றோம். உங்கள் வசதிப்படி கற்கை நெறிகளை நீங்களே தெரிவுசெய்து கொள்ளலாம். எமது நிறுவனமானது ஒவ்வொரு தொழில்சார் துறை நிறுவனங்களுடன் நேரடியான தொடர்பினைக் கொண்டுள்ளது. உங்கள் விருப்பப்படி கற்கைநெறிகளில் உங்களை பதிவு செய்வதற்குத் தேவையான ஒழுங்குகளை எமக்கூடாகவே நீங்கள் செய்து கொள்ளலாம்.
கற்கை நெறிக்கான விரிவுரைகள், தொடர்ச்சியான கருத்தரங்குகள் தொழில்சார் அனுபவ பயிற்சிகள் யாவும் தொழில்சார் அறிவும் பல வருட பட்டறிவும் கொண்ட எமது நிறுவன பிரத்தியேக விரிவுரையாளர் குழுவால் நடத்தப்படும்.
மேலதிக விவரங்களுக்கு: இல.10.செம்மணி வீதி, முத்திரைச் சந்தி, நல்லூர். (கிட்டு பூங்காவிற்கு முன்பு) என்னும் முகவரியில் உள்ள எமது நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளவும்.
021 - 3548
E-mail: ipaslK@ Yahoo.com Office hours: 9.00 hrs t0 17.00 hrs (SLT)
'To provide unmatched and reliable educational services to the Northern students and to be the best professional Institute in Sri Lanka' (4988)

யாழ்.நகரில் முதன்முதலாக GIT பாடத் திட்டத்தை அறிமுகம் செய்த நாம், உங்களுக்காக மீண்டும் இணுவிலில்.....
கணனி அறிமுகம், வன்பொருள், மென்பொருள், கணினிப் பிரயோகங்களினூடான கல்வி முறைகள், நவீன இணையத் தொழில் நுட்பங்கள், மற்றும் பொதுத் தகவல் தொழில் நுட்பப் பாடத்திட்டம் (2004 பிரிவு மாணவர்களுக்கான கல்வி அமைச்சின் புதிய பாடத்திட்டம் - GIT)
அடங்கிய
இலவச தகவல் தொழில் நுட்பக் கருத்தரங்கு – 2002
காலம் : 23, 24 - 06 - 2002.
இடம் : கணனியியல் கல்லூரி, கே.கே.எஸ் வீதி, இணுவில்.
நேரம் : காலை 09.00 மணி முதல் - 01.00 மணி வரை
மேலதிக விவரங்களுக்கு :
College Of Computer
கணனியியல் கல்லூரி
கே.கே.எஸ் வீதி, இணுவில்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.06.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.